[illegible]

V·3 · No. 22 29 [illegible] 1930.

JL
m211, M28KN
M30·3·22
189106.

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹு மே மீ 29உ [No 22.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 421
2. அப்பர் (யுத்தக்கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 423
3. குறுந்தொகை (பாட்டு 76—82)
K. இராமரத்நம் ஐயர் B. A. 425
4. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L. 427
5 இலஞ்சிப் பாவை (ஸ்ரீபாலன் மன்னனைக்காணல்)
T. S. நடராஜபிள்ளை. B.A., B.L 430
6. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 433
7. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 435
8. வர்த்தமானம் 439

SEP 1930
189106.

கலாநிலயம்

தர்க்கத் தளர்ச்சி.

தர்க்கமோ பொல்லாதது. அதனிற் சிறிது தவறினால் விளைகின்ற மோசம் எத்துணைப் பெரியதென்பதை உணர்வாராயின் மாந்தர் இத்துணை எளிதில் தம் வாய்வந்தனவெல்லாம் வழங்கிவிடத் துணியார். தெள்ளிய அறிவும் இளகிய உள்ளமும் கூடிக்கலந்து நடக்கும் வாழ்க்கையே தாள இராக ஸ்வரங்கள் பிறழாமல் ஒழுகுமொரு பண்ணமைந்த வாழ்க்கையாகும். தெள்ளிய அறிவு தருவன, தர்க்க சாஸ்திரம் மானதசாஸ்திரம் அனைய சாஸ்திரங்கள். இளகிய இதயத்தராக்குதல் கலைகளின் தொழில். இளகியதோர் இதயத்தில், உலகத்தினுடொரு ஒத்துணர்ச்சி ஊடாடிநிற்கும். (ஒத்துணர்ச்சி Sympathy என்பதன் தன்மையை இவ்விதழில் வந்துள "மானதசாத்திரத்தில்" ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் ஒரு சிறிது குறித்திருக்கின்றார்). நுண்ணிய புத்தியும் திண்ணிய உடலும் மாத்திரம் இருப்பவர் திறத்து இவ்வொத்துணர்ச்சி தலையெடுக்க இடமில்லை. பண்பட்ட மனத்தினைப் பெறுதற்குரிய சாதனங்களும் அவர்பாற் சேரவேண்டும். செல்வத்தோடு மற்றெல்லாச் சிறப்புக்களும் வாய்ந்தவர்களிலும் இப்பிறவிப்பெருந்தொல்லைகளில் ஒன்றல்லாக்கால் ஒன்றினால் உடையாத இதயத்தை உடையவர் எத்தனை பேர்? உடைவதற்கென்றே உண்டாக்கப்பட்டன போலும் இம்மானுட இதயங்கள்! வறுமையால், பிணியால், விழுப்பொரு ளிழந்ததால், உற்றார் இறத்தலால், பெற்றோர் கொடுமையால், பிறந்தார் கயமையால், மணந்தார் குணக் கெடுதியால், உறவினர் உலோபத்தால், அயலான் அவ்வியத்தால், வீணர் இகழ்ச்சியால், நம்பினோர் கெடுத்த வஞ்சகத்தால், தம்முடைய மனச்சாக்ஷியின் சுடுகையால், பரிபவத்தால், பண்டை வினையின் தீமையால், மனிதர் தம் இதயம் உடையாமற் காத்த லருமையெனினும், அவ்வாறு காக்கவேண்டுமென்பது பெரியதோர் கருமமன்று. தான்படுந் துயர்களால் தழும்பேறிய மனம், பிறர் துயர்க்குப் பரிவதில்லாக் கல்லாக இறுகாமல் காக்குமதே பெருமையுடைத்து துன்பத்தால் நொந்திருப்பார்களும், இன்பத்தால் தடித்திருப்பார்களும் ஆகிய இருதிறத்தோரும், மற்றவரோடு ஒத்துணரும் பயிற்சியின்றிப் பெரும்பாலும் கன்மனக் கள்ளர்களாகவே முடிகின்றனர். கலையின் குறைவே இன்னதற்குக் காரணம். கலையினால் மெழுகென இளகப்பெறு மனம் வறண்ட பாறைபோல் பசையற் றிறுகுவது திண்ணம் சிந்தனையெல்லாஞ் சிலையாயபின் புறத்துள பொருள்க ளனைத்தையும் பெற்றாலும் ஒருவன் பெரி துத்தம னாதலுண்டோ!

கலையின்பயிற்சி கைவராதார்கதி அதுவாகத் தர்க்க முறைத் தேர்ச்சியில்லாதார் தன்மையை நோக்குங்கால் நல்லோ ருள்ளம் நடுக்குறும். ஓரினப் பொருள்களுக்குரிய பொதுக்குணம் ஒன்றினை நினைவிற் கொண்டு, அந்தக்குணம் உடைய பிறவற்றையும் அவ்வினத்தைச் சேர்ந்ததாகப் பாவித்துக்கொள்கின்ற வஞ்சனை, தர்க்கத்தைத் தழுவாமல் இழைக்கின்ற

பிழைகளில் மிகவும் சாதாரணமானது. ஆட்டுப்பால் மாட்டுப்பால் பூனைப்பால் நாய்ப்பால், எனப் பால்கள் பலவற்றைப் பார்க்குமிடத்து அவைகளெல்லாம் வெள்ளையாய் இருப்பதுபற்றிப் "பால்களெல்லாம் வெள்ளையா யிருக்கும்" என்று கூறலாம். ஆனால் இதனையே மாற்றி, "வெள்ளையா யிருப்பனவெல்லாம் பால்களே" என்று கருதலாமோ? சுண்ணாம்பு நீர் வெள்ளையாயிருக்கின்றது; ஆனால், அது பாலன்று. "பால்களெல்லாம் வெள்ளையாயிருக்கும்" என்ற கொள்கை மெய்யென்றுணர்ந்த மாத்திரையில், "வெள்ளையாயிருப்பன வெல்லாம் பால்களே" என்று மயங்கிச் சுண்ணாம்புநீரைப் பாலெனவொருவன் பருகுவானாயின் அவன் மதி என்னும், கதிதான் என்னும்? அவ்வாறே, "நீக்ரோ ஜாதியார்களெல்லாம் கருநிறமுடையவர்கள்" என்ற வாசகத்திலிருந்து, "கருநிறமுடையவர்களெல்லாம் நீக்ரோ ஜாதியர்கள் ஆவார்" என்றோர் உண்மை உணரப்புகுவதும் பேதைமை என்பது வெளிப்படை.

இவ்வுதாரணங்களை நோக்குமளவில், எதிர்முறை வாக்கியத்தின் பொருள் பொருத்தமில்லாதிருப்பது எளிதிற் புலப்படுவதால், பச்சைக் குழந்தைகளல்லாக்கால் இத்தகைய பிழைகள் இழைப்பாரும் இவ்வுலகின்கண் உளரோவெனச் சிலர் எண்ணலாம். இத்தகைய தர்க்கப் பிழையின் தன்மை இதுவேயாயினும் இவ்வளவு வெளிப்படையாய் வழங்குதலின்றித் தன் காரியத்தை அது மிகவும் நுட்பமாய் நடத்திக்கொள்கிறது. இதற்குதாரணமாகச் சென்றவாரம் "லோகோபகாரி" ப்பத்திரிகையில் வந்துள, ஸ்ரீமான் சி. சுப்ரமண்ணிய பாரதியாது 'தைரியம்' என்னும் தலைப்புடைய கட்டுரையைச் சிறிது ஆய்ந்து பார்ப்பது பயன்படும். அன்னார் எழுதுகின்றார்: —

"ஸமஸ்கிருத பாஷையில் தைரியம் என்பதோர் சொல்லுண்டு. தீரனுடைய இயற்கை தைரியம். தாதுப்பொருளைக் கவனிப்போமானால் அறிவுடையவன் என்று அர்த்தமாகும். துணிவுடையவனுக்கும் அந்தப் பாஷையிலே அதுவே பெயராக வழங்கப்படுகிறது. எனவே 'தைரியம்' என்ற சொல் அறிவுடைமை என்றும் துணிவுடைமை என்றும் இருவித அர்த்தங்களுடையது. இங்ஙனம் இவ்விரண்டு கருத்துகளுக்கும் ஒரே சொல் வழங்குவது அந்தப் பாஷையின் பெருமைக்குள்ள சின்னங்களிலே ஒன்றாம்.

"இதிலிருந்து நாம் தெரியக்கூடியது யாதென்றால் துணிவுள்ளவனையே அறிவுள்ளவனென்பதாக நமது முன்னோர்கள் மதிக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழை ஒருவன் தன்னைப் பல சாஸ்திரங்கள் கற்றவனென்றும் அறிவாளியென்றும் சொல்வானானால் அவனை நம்பாதே. அவன் முகத்தை நோக்கிக் காறி உமிழ்ந்துவிட்டு அவனிடம் பின்வருமாறு சொல்: — அப்பா, நீ ஏட்டைத் துளைக்கும் ராமபாணப் பூச்சியைப் போலப் பல நூல்களைத் துளைத்துப் பார்த்து ஒருவேளை வாழ்நாளை வீணாக்கியிருக்கக்கூடும். ஆனால், அச்சம் இருக்கும்வரை நீ அறிவாளியாகமாட்டாய். அஞ்சாமைக்கும் அறிவுக்கும் நமது முன்னோர்கள் ஒரே சொல்லை உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள். அதை நீ கேள்விப்பட்டதில்லை போலும்.

"ஆம். அச்சமே மடமை. அச்சமில்லாமையே அறிவு. விபத்துகள்வரும்போது நடுங்குபவன் மூடன், அவன் எத்தனை சாஸ்திரம் படித்திருந்தபோதிலும் மூடன்தான். விபத்துக்கள் வரும்போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றை வெல்ல முயற்சி செய்கிறானோ அவன் ஞானி. ஹரி ஓம் என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான். சிவாஜி மஹாராஜா தனது சொந்தப் பிரயத்தனத்தாலும் துணிவாலும் புத்தி கூர்மையாலும் அவுரங்கசீபின் கொடுங்கோன்மையை அழித்து மஹாராஷ்டிரம் ஏற்படுத்தித் தர்ம ஸ்தாபனம் செய்தார். அவர் ஏட்டுப்படிப்பில் தேர்ந்தவரல்லர். இக்காலத்தில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துப் பரீக்ஷைகள் தேறி 15 ரூபாயைக்கொண்டு பிழைப்பதற்காகத் தமதுதர்மத்தையும் ஆத்மாவையும் விலைப்படுத்தக்கூடிய மனிதர்கள் ஆயிரக்கணக்கான சுவடிகள் படித்துக் கண்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிவாஜி மஹாராஜாவுக்கு மஹாராஷ்டிரராஜ்யம் லாபம். இவ் விருவரிலே யார் சிறந்தவர்! இவ் விருவரிலே யார் அறிஞர் ?

"பாரத வாசிகளாகிய நாம் இப்போது புனருத்தாரணம் பெறுவதற்குக் கல்வி வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நாம் துணிவு வேண்டும் என்கிறோம். துணிவே தாய். அதிலிருந்துதான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன.

அறிவிற்கும் துணிவிற்கும் ஆரியத்தில் ஒரே சொல் வழங்குவதினின்று இக்கட்டுரையாசிரியர், துணிவுள்ளவனையே அறிவுள்ளவன் என்பதாக நமது முன்னோர்கள் மதித்தனரெனக் கொண்டனர். இக்கொள்கை இவர்க்கு எவ்வாறு கிடைத்ததென்று தேர்தல் அருமையா யிருக்கின்றது. அறிவுடையோர்களெல்லாம் தீரர்களாயிருப்பாரென்று ஆரியார் ஒருவாறு கருதியிருக்கலாம். அறிவு துணிவு என்னும் இவைகளின் உண்மையிலக்கணத்தை உள்ளபடி உணர்ந்தார்க்கு இவ்வாசகம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும். அறியாமையே பெரும்பாலும் பயத்திற்கெல்லாம் காரணமாதலால் அறிவுடையோர் அஞ்சாத தீரர்களாயிருப்பது இயற்கையே. ஆனால் தீரம் வேறு, மூர்க்கம்வேறு. அஞ்சாது ஒன்றினைச் செய்வதால் வரும் நன்மை இன்னதென்று ஓர்தற்குரிய புத்திப்பயிற்சி யின்றியே, காமக் குரோதாதிகளின் தூண்டுதலுக் கிணங்கி, வந்தது வரட்டுமென்ற தன்மையில் முழங்குவது மூர்க்கம். நீந்தத் தெரியாதானொருவன் இரத்தினத்திற் காசைப்பட்டுக் கடலுள் குதிப்பானாயின் அது மூர்க்கமே யன்றித் தீரமன்று. கொள்ளைக்காரர்களும் மோசக்காரர்களும் சிற்சில சமயம் மிகவும் ஆபத்திற்கிடமான செய்கைகளைச் செய்கின்றனர். இத்தகையவர்களைத் தீரரென்றும், தைரியம் உடைமையால் சிறந்த அறிவாளிகளென்றும் அழைக்க இயலுமோ! தர்க்கப் பிறழ்ச்சியால், இக்கட்டுரையாசிரியரது கொள்கையின்படி, அவ்வாறு அழைக்கவேண்டி நேரிடுமே. "அறிவுடையோர்கள் அஞ்சமாட்டார்" என்ற வாசகத்தை மனதிற்கொண்டு இவர் "அஞ்சாதவர்களெல்லாம் அறிவுடையோர்" என்றுபுரட்டிவிட்டார். மறைகுருட்டுக்கண் இருட்டிற் கஞ்சாதாகையால், இவ்விதியின்படி, அஞ்சாக் குருடனே அறிவும் ஒளியும் உடையவன் ஆதல் வேண்டும். இந்தப் பிறழ்ச்சியின் பயனாய் வீர வார்த்தைகள் பல விளம்பலாயின. கல்வியையும் கைவிதிர்த் தோட்டிவிட்டார். கல்வியிலாதான் ஞானி ஆவதும், அத்தகைய ஞானிக்குச் சிவாஜிமஹாராஜா உதாரணம் ஆவதும், அந்தச் சிவாஜி மஹாராஜாவிற்கு மஹாராஷ்டிரராஜ்யம் இலாபமானதும்போன்ற விளம்பரங்களி லடங்கிய பெருமிதமெல்லாம் தர்க்கக்கட்டின்றித் தளர்ந்துபோகின்ற காட்சி இனிப் புலப்படுதல் அருமையன்று.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[404-வது பக்கத் தொடர்ச்சி]

பாடாண்டினை.

கதமிக் கெழுபடைக் காவல் வேந்தன்
புதல்வற் பயந்த பொலிவு மங்கலம்:—

முந்தைகாண் மூவரினு முதலா னான்காண்
மூவிலைவேன் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் டண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் டாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையோன் [றேறும்
எந்தைகா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே.

திருக்கச்சியேகம்பம் - திருத்தாண்டகம் 9.

வாட்படைத் தானை மன்னவன் பிறந்த
நாட்சிறப் புரைத்த நாண் மங்கலம்.

(உ - ம்) திருவாரூர் திருவாதிரைத் திருப்பதிகம்.

பண் — குறிஞ்சி

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
சுத்த னாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.
பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்த
சீரூர் பாட லாடல றாத செம்மாப்பார்ந்
தோரூ ரொழியா துலக மெங்கும் பணிந்தேத்தும்
ஆரூ ரன்ற னாதிரை நாளா லதுவண்ணம்.

விரைந்து கோடைபெற்றும் விடைபெறு திரவலன்
பரிந்துகடைக் கூட்டிய பரிசில்நிலையின் உருவகம்

"பார்முழுதும் விண்முழுதும் தந்தாலுங் களியாப்
பாலருடன் உன்மத்தர் பசாசர்குணம் வருமே.

தாயுமானவர்.

பலவும் பயனுள் ளனபற் றமொழிந்தோம்
கலவம் மயில்கா முறுபே டையொடாடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
நிலவும் பெருமா னடிநித் தனினைந்தே. சம்பந்தர்.

வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத் [தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திருப்புலியூர்
அத்த னருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே?

திருப்பாதிரிப் புலியூர் - திருவிருத்தம் - 5.

வண்புக ழறைந்தோர்க்கு மன்னவ னுதவிப்
பண்புற விடுத்த பரிசில் விடை

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவா யொற்றி யூரே. சுந்தரர்.

மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கை போய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கும் வேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே.

திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருக்குறுந்தொகை.

நிறைவினை முற்றிய நீள்கழ லோன்மனை,
மறன்மலி புரைத்த வாள்வினை வேள்வி:—

சற்றுங்கேரி யோம்பிக் கலியைவா ராமே
செற்றார்வாழ் திவ்யச் சிற்றம்பல மேய
முற்றுவெண் டிங்கண் முதல்வன் பாதமே
பற்றுநின் றாரைப் பற்றா பாவமே. சம்பந்தர்.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே.

அப்பர் - திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் - 10

"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியுமாற்றிடைக் காட்சி யுறழத்தோன்றிப் பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச் சென்றெதிர்த் தெரித்த வாற்றுப் படை" களில்,

கூத்தராற்றுப்படை:—

கூறுந டைக்குழி கட்பகு
வாயன பேயுகந் தாடநின் றோரியிட
வேறுப டக்குட கத்திலை யம்பல
வாணனின் றாடல்வி ரும்புமிடம்
ஏறுவி டைக்கொடி யெம்பெரு மானிமை
யோர்பெரு மானுமை யாள்கணவன்
ஆறுச டைக்குடை யப்பனி டங்கலிக்
கச்சிய னேகதங் காவதமே. சுந்தரர்.

வெங்கடுங் காட்டகத் தாடல்
பேணி விரிபுன் சடைதாழத்
திங்கடி ருமுடி மேல்வி
ளங்கத் திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாயலெ ழில்க
வர்ந்த சைவர்க் கிடம்போலும்
பைங்கொடி முல்லை படர்
புறவிற் பரிதிந் நியமமே. சம்பந்தர்.

நீடு காடிட மாய்நின்ற பேய்க்கணங்
கூடு பூதங்கு ழுமிநின் றார்க்கவே
யாடி னாரழ காகிய நான்மறை
பாடி னாரவர் பாலைத்து றையரே.

திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை

பாணராற்றுப்படை:—

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதருஞ் சோறுங் கூறையு
மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே. சுந்தரர்.

பாடு கின்றபண் டாரமே பத்த ரன்னபண் டாரமே
சூடுகின்றது மத்தமே தொழுத வென்னையுன்மத்தமே
நீடு செய்வதுந் தக்கதே நின்ன ரைத்திகழ்ந் தக்கதே
நாடு சேர்மிழலை யூருமே நாகரஞ் சழலை யூருமே.

சம்பந்தர்.

மன்னு சீர்மங் கலக்குடி மன்னிய
பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் றன்பெயர்
உன்னு வாரு முரைக்கவல் லார்களுந்
துன்னு வார்நன் னெறிதொடர் வெய்தவே.

திருமங்கலக்குடி-திருக்குறுந்தொகை 6.

பொருநராற்றுப்படை (உருவகம்):—

போர்த்தானை யின்னுரிதோல் பொங்கப் பொங்கப்
புலியதளே யுடையாகத் திரிவான் றன்னைக்
காத்தானை யைம்புலனும் புரங்கண் மூன்றுங்
காலனையுங் குரைகழலாற் காய்ந்தான் றன்னை
மாத்தாடிப் பத்தராய் வணங்குந் தொண்டர்
வல்வினைவே ரறும்வண்ண மருந்து மாகித்
தீர்த்தானைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே

திருமுதுகுன்றம் - திருத்தாண்டகம் 7.

விறலியாற்றுப்படை (உருவகம்):—

இகழ்ந்தவன் வேள்வி யழித்திட்
டிமையோர் பொறையிரப்பத்
திகழ்ந்திட வன்றே விசயமுங்
கொண்டது நீலகண்டா !
புகழ்ந்த வடியேன்றன் புன்மைக
டரப் புரிந்துநல்காய்
திகழ்ந்த திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சத்திமுற்றம்-திருவிருத்தம் - 8.

சொல்லக் கருதிய தொன்றுண்டு
கேட்கிற்றொண் டாயடைந்தார்
அல்லற் படக்கண்டு பின்னென்
கொடுத்தி யலைகொண்முந்நீர்
மல்லற் றிசைச்சங்க நித்திலங்
கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந் தெற்றொற்றி
யூருறை யுத்தமனே.

திருவொற்றியூர் - திருவிருத்தம் 2.

மொழியுமெங் கடுஞ்சொன் முறையுளி நிற்பின்
வழிபயன் படூஉமெனும் வாயுறை வாழ்த்து:—

தடுக்கவுந் தாங்க வொண்ணத்
தன்வலி யுடைய னாகிக்
கடுக்கவோர் தேர்க டாவிக்
கையிரு பதுக ளாலும்
எடுப்பனெ னென்ன பண்ட
மென்றெடுத் தானை யேங்க
அடுக்கவே வல்ல னாரா
மணிமறைக் காடு தானே.

திருமறைக்காடு - திருநேரிசை 5.

பெரியோர் பேணிய செவியறிவு:—

முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
யின்ன நாளுன சேவடி யேத்திலேன்
செங்நெ லார்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே. (1)
விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
யண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. (2)

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை.

குடை மங்கலம்:—

(i) குடையுடை யரக்கன் சென்று
குளிர்கயி லாய வெற்பின்
இடைமட வரலை யஞ்ச
வெடுத்தலு மிறைவ னேக்கி
விடையுடை விகிர்தன் றானும்
விரலினா லூன்றி மீண்டும்
படைகொடை யடிகள் போலும்
பழனத்தெம் பரம னாரே.

திருப்பழனம் - திருநேரிசை 10.

(ii) விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி யெழுத்தாகி யியல்பு மாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி யின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம்,

R. சுப்பிரமணிய ஐயர் இயற்றிய தமிழ்ச் சட்டப் பிரசுரங்கள்.

பெரிய ஹிந்து லா ரூ. 2, புதிய விவகார சிந்தாமணி என்கிற தஸ்தாவேஜுகளின் சட்டம் ரூ. 2-8, கிரிமினல் ப்ரோஸீஜர் கோட் என்கிற க்ரிமினல் லா ரூ. 3, புது ஹிந்து தர்மஸ்தாபனச் சட்டம் ரூ. 1, தர்ம சொத்துகளின் டிரஸ்டி ஆக்ட்டு அணா 14, நில ஆக்கிரமிப்புச் சட்டம் அணா 4, கிராம முனிசிப் மான்யூல் கிராமச் சுகாதாரம் ரூ. 1-10, லோக்கல் போர்ட் ஆக்ட் ரூ. 1-8, மகம்மதியர் லா ரூ. 2, புது ஸ்டாம் பாக்ட் அணா 12, புது இன்கம்டாக்ஸ் (வருமான வரிச் சட்டம்) ரூ. 1, எஸ்டேட் லாண்ட் ஆக்ட் (ஜமீன்குடி நிலச் சட்டம்) ரூ. 1-4, கால நிர்ணயச் சட்டம் அணா 8, ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம் அணா 10, சிவில் லா என்கிற சிவில் ப்ரோஸீஜர் கோட் ரூ. 3, இந்தியன் பினல்கோட் சட்டம் ரூ. 3, புதிய கிராமப் பஞ்சாயத்து ஆக்ட் ரூ. 1-4, பாரம்பரையான கிராம ஊழியம் அல்லது உத்தியோகங்களைக் குறித்தச் சட்டம் ரூ. 1, இந்து தேசத்துச் சாட்சி ஆக்ட் ரூ. 1.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்:—

சுகந்த புஷ்பம் ரூ. 1, சாருலோசனா (முதற் பாகம்) ரூ. 1, கோபாலரத்தனம் அணா 14, வீர வஸந்தா அணா 8, மாதவமணி அணா 3, வைதேகி (2-பாகங்கள்) ரூ. 2-8, பத்மசுந்தரம் 2-பாகம் ரூ. 2-8, ராதாமணி 2-பாகம் ரூ. 2-8, சண்பக விஜயம் ரூ. 1-12, கௌரி முகுந்தன் ரூ. 1-12, நவநீதகிருஷ்ணன் ரூ. 2.

V. S. T. Swamy Novel Depot. VEPERY, MADRAS.

குறுந்தொகை.

[407-வது பக்கத் தொடர்ச்சி-]

கிள்ளிமங்கலம் கிழார்] 76 [குறிஞ்சி

தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்ததைத் தோழி உணர்த்தக்கேட்ட தலைமகள் அவளுக்குச் சொல்லியது.

காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்வ னென்ப, ஓங்கல்வரை மார்பன்;
சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூங்குங்
கடும்பனி யச்சிர நடுங்கஞ ருறவே.

(உரை). உயர்ந்த மலைபோன்ற மார்பையுடைய தலைமகன் காந்தட் செடிகளாலாகிய வேலியையும் உயர்ந்த மலைகளையும் உடைய நல்ல நாட்டையும் (மிக்க) செல்வத்தையும் உடையவனென்று சொல்லுவார்கள். அஃதேல், மலையின்மீது சேம்பினது அசைந்தாடும் அகன்ற இலையைப் பெரிய யானையினது செவியெனத் தோன்றுமாறு செய்து குளிர்ந்துவரும் வடகாற்றுத் தங்கி வீசும் மிக்க பனியோடு கூடிய முன்பனிக்காலத்தால் (துணைவரைப் பிரிந்தார்க்கு) உளதாகும் நடுங்கச் செய்யுந் துன்பத்தை நாம் உறுமாறு (நம்மை விட்டுப் பிரிந்து) அவர் போனது எதற்கோ?

அலங்கல் - அலங்குதல், காற்றால் அசைதல். வள்ளிலை - பெரிய விசாலமான இலை (broad leaves). செவியின் மான - செவியினைமான (ஒப்ப, ஒக்கும்படி). தைஇ - செய்து. தூங்கும் - ஓயாது வீசும் (blowing without ceasing). அச்சிரம் - முன்பனிக் காலம். அச்சிர நடுங்கஞர்- அச்சிரத்தினது, அச்சிரத்தால் உளதாகும் நடுங்கஞர். நடுங்கு அஞர் - நடுங்கச் செய்யும் துன்பம். 'அவர் போனது எதற்கு?' என்பன சொல்லெச்சம்.

'அச்சிரம் வந்தன் றமைந்தன் றிதுவென, நடுங்குதும் பிரியின்யாம் கடும்பனி யுழந்தே' (அகம் 217) என்றார் பிறரும்.

பல்வளங்கெழு மலைநாட்டையும் மிக்க செல்வத்தையும் உடையாராகிய அவர் பொருளீட்டுங் காரணமாகச் சேணகன்றது எதற்கு?' என்பான் 'நன்னாட்டுச் செல்வன் என்ப' என்றாள்.

மதுரை மருதனிளநாகனார்] 77 [பாலை

பொருள் வயிற் பிரிந்த தலைமகனது பிரிவின்கண் ஆற்றாது வருந்திய தலைவி தோழிக்கு உரைத்தது.

அம்ம, வாழி, தோழி; யாவதும்
தவறெனிற் றவறோ விலவே; வெஞ்சுரத்
துலந்த வம்பல ருவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநீ ராகும்
அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

(உரை). தோழி, நான் சொல்வதைக் கேள். கொடிய சுரத்திடை (எயினர் எய்து வீழ்த்திட) மடிந்த வழிப்போக்கருடைய பிணத்தின்மேல் (அவற்றை மறைப்பதற்காக) இட்ட தழையின் குவியல் நெடிய நல்ல யானைக்குக் குளகை இட்டுவைத்த தன்மையதாகும் கடத்தற்கரிய காட்டிடைச் சென்றாராகிய தலைவரிடத்துத் தவறுண்டோ எனின், தவறு சிறிதும் இல்லை; எனது பருத்த தோள்கள் (அவர்க்கு மிகவும்) எளியவாயின. (இந்த எனது தவறே தவறு.)

உலந்த-மரித்த, மடிந்த. வம்பலர் - வழிச்செல்வோராகிய அன்னியநாட்டவர்; புதியோர் (foreign, strange-way farers) உவல் - தழை. பதுக்கை - இலை, தழை அல்லது கல்லின் குவியல். உவலிடு பதுக்கை - a heap of green leaves thrown over the bodies of those murdered for the sake of plunder. பொருளைக் கவர்வதற்காக வழிப்போக்கர்களைக் கொன்ற பாலைவனமாக்களாகிய எயினர் அப்பிணங்களின்மீது இலை கல் முதலியவற்றைக் குவித்து மூடிவிடும் வழக்கைப் பாலையை வருணிக்குமிடத்துப் பழைய நூல்களிற் பாக்கக் காணலாம். அவ்விடங்களுட் சில இவை:—

வன்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை. (புறம். 3)
அம்பின் விசைபட வீழ்ந்தோர்
எண்ணுவரம் பறியா உவலிடு பதுக்கை. (அகம். 109)
வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை. (ஷை 157)
எவ்வல் லாடவர்
ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கல். (ஷை 215)
கொலைவர்
கொடுமரந் தேய்த்தார் பதுக்கை. (பாலைக்கலி. 11)

"எளியவாகிய தடமென் றோளே" என்றது தலைமகன் தன்னை முதன்முதல் பொழிலகத்துத் தலைப்பட்ட ஞான்றும், பின்பும் தான் எளிதில் அவன் வசப்பட்டுக் களவுக் கூட்டத்துக்கு இணங்கியது தன் தவறேயன்றி அவன் தவறன்று என்று தனது பெரும் பேதைமையைக் குறித்து அவள் நொந்து கூறியதாம்.

இறைச்சி:—எயினர், தாங் கொன்றவருடலை மறைப்பதற்கு மேலிட்ட தழைக்குவியல் யானைக்கு உணவாக வைத்த குளகுத்திரளைப்போலத் தோன்றும் என்ற குறிப்பால் தம்மைத் துயரிடை மூழ்குவித்து வருத்துவதற்குப் பிரிந்த தலைமகனது பிரிவு வறியோர்க்கு நல்கும்பொருட்டுப் பொருளீட்டச்சென்ற பிரிவெனப் பிறர்க்குத் தோன்றுமென அவனைத் தலைமகள் இகழ்ந்தவாறும்.

நக்கீரனார்] 78 [குறிஞ்சி

தலைவியைக் களவினி லெய்திக் காமந்துய்ப்பதற்குப் பாங்கனது உதவியைப் பெறவேண்டி அவனுக்கு உற்றதை உணர்த்திய தலைமகனை அவன் கட்டுரை மொழிந்து கழறியது.

பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங் குமலை வெற்ப,
நோதக் கன்றே காமம்; யாவதும்
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பே தைத்தே.

(உரை). பெரிய மலையின்மீதுள்ளதாகிய நீண்ட வெள்ளிய அருவி பழைமைபொருந்திய கூத்தாது முழவைப் போல அதிர்ந்தொலித்து மலையினின்று விழும் விளக்கமுற்ற மலைக்குத் தலைவ; காமம் வருந்தத்தக்க தொன்று அன்றோ? அது தீதென்று உணர்ந்தாரிடத்தும் பொருந்தி நீங்காது நிற்கும் பெரிய பேதைமையை விளைக்கும் இயல்பிற்று அன்றோ? (ஆகலால் இத்தகைய காமத்தை இனி நீ தவிர்.)

முது - முதுமை, பழைமை. வாய் - வாய்த்தல், பொருந்துதல். கோடியர் - கூத்தாடுவோர் (Dancers). ததும்பி -

முழங்கி. 'மலை வெற்ப' என்ற விடத்து 'வெற்பன்' என்பது 'தலைவன்' என்னும் இடுகுறி மாத்திரையாய் நின்றது. நோதக்கு - ('நோவத்தக்கது' என்பதன் விகாரம்); பின்தி நினைத்து வருந்தத்தக்க தன்மையது; (that which will give rise to repentance afterwards). யாவதும் - சிறிதும். நன்றெனஉணரார் - தீதெனஉணர்வார். நிற்கும் - நீங்காது நிலைபெற்றுத் தங்கும். பேதைத்து - பேதைமைக்குக் காரணமானது. பேதை - பேதைமை' என்பதின் குறை. காமம் நோவத்தக்க தென்பதும், பெரும் பேதைமையை விளக்கும் என்பதும், ஆகையால் தக்கோரால் தவிர்க்கற்பாலதென்பதும் பாங்கன் கழறிய கட்டுரைகளாம்.

இறைச்சி:—'மலைமீதுள்ள அருவி முழங்கிக்கொண்டு கீழிறங்கி அயலெங்கும் பரவுவதுபோல மலைப்பொழிலகத்து நிகழும் உனது களவொழுக்கம் ஊரெங்கும் வெளிப்பட்டு அலராய்விடும்' என்று தலைமகனுக்குப் பாங்கன் குறிப்பா லுணர்த்தியதாம்.

குடவாயில் கீரத்தனார்] 79 [பாலை

சொல்லாது வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் நீரும் நிழலுமற்ற கொடுஞ்சுரத்துற்றானைக் குறித்துத் தலைமகள் கவன்று தோழிக்குக் கூறியது.

கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே, யாந்தமக்
கொல்லே மென்ற தப்பல்
சொல்லா தேகல் வல்லு வோரே.

(உரை). காட்டுயானை பட்டையைக் கிழித்து விரும்பியுண்டுவிட்ட பொருக்கையுடைய தாளொடு கூடிய ஓமைமரத்தின் காற்றடித்தலால் அசையும் உலர்ந்த நெடிய கிளையின்மேல் ஏறியிருந்து பெட்டைப் புறக்கள் தனிமையை உணர்த்தும் மெல்லிய குரலோடு தமது துணையாகிய ஆண்புறாவை விரைந்து கூவியழைக்கும் அரிய சுரத்திடைப் பொருந்திய அழகிய எயினச்சாதியர் வாழும் சிற்றூரைச் சென்றடைந்து அங்கே தனியே தங்கினர்கொல்லோ, தம்பிரிவை நமக்கறிவித்தால் நாம் அதற்கு இசையோம் என்ற தவறான எண்ணத்தால் நமக்குமுந்திச் சொல்லாது பிரிந்தேக வல்லவராகிய நங்காதலர்.

தோல் - மரத்தின் மேற்பட்டை. பொரிதாள் - மீனின் செதிள்போன்ற பொருக்கையுடைய பட்டையையுடைய மரத்தினடி (the stem of a tree having a scaly bark), 'இருங்கழி முதலை மேந்தோ லன்ன, கருங்கா லோமை, (அகம் - 3) என்றார் பிறரும். ஓமை - பாலைநிலத்துக் குரியதோர் மரம். அலங்கல் - அசைதல். உலவை - உலர்ந்தது. சினை உலவை - உலவையாகிய சினை, (a dried up and withered branch). புலம்பு-தனிமை, வருத்தம். பயிரும்-விளிக்கும், கூவியழைக்கும். அத்தம் - அருஞ்சுரம். சீறூர் - பாலைநில மக்களாகிய எயினர், குன்றவாணராகிய குறவர் முதலியோர் வாழும் ஊர். அங்குள்ளார் அழையாது தாமாகவே சென்றார், துணையன்றித் தனியாகச் சென்றார் என்ற இருபொருளும் தோன்றத் 'தாமே சேர்ந்தனர்' என்றான். தமக்கு - தமது பிரிவுக்கு. ஒல்லேம்-இசையேம், சம்மதியேம். தப்பல் - தவறு, இங்குத் தவறான எண்ணம்; மணம்முடித்தற்கு வேண்டிய பொருள்கொணரும்பொருட்டுப் பிரியும் பிரிவாதலின், தாம் அதனைத் தடுக்காது அதற்குச் சம்மதித்திருப்பாராதலின் அவன் நினைத்தது 'தப்பல்' என்றான். தப்பல் சொல்லாது,-தப்பலாற் சொல்லாது என மூன்றனுருபு விரிக்க. 'வல்லுவோர்' என்றது, அன்புடையார்க்கு இவ்வாறு பிரியும்வன்மை இயல்பன்று என்னுங்கருத்தால்.

இறைச்சி:—யானை, தோலை நயந்துண்டு விட்டுப்போன ஓமையைப்போலத் தனது மெய்நலனையெல்லாம் தலைவன் விரும்பியுண்டு வெற்றுடம்பினளாய்த் தன்னை விடுத்து அகன்றதைக் குறித்தவாறும்.

ஔவையார்] 80 [மருதம்

தலைமகனை மனைக்கு மீளவிடாது தன்வசப்படுத்திக் கொண்டமைபற்றித் தன்னைத் தலைமகள் புறங்கூறியதாகக் கேட்ட பரத்தை அவளுக்குப் பாங்காயினர் கேட்பக் கடிந்து கூறியது.

கூந்த லாம்பல் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறும்; தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே.

(உரை). புதுவெள்ளம் வந்த பெரிய (நீர்த்) துறையை விரும்பி யாம் எமது கூந்தலில் ஆம்பலின் புறவிதழொடித்த முழுப்பூவைச் செருகி அப் புனல்விளையாட்டைச் செய்யச் செல்வோம்; தலைமகள் அதனை அஞ்சினளாயின், வெய்ய போரில் தூசிப்படை அழியும்படி எதிர்த்துநிற்கும் பலவேல்களையுடைய 'எழினி' பகைத்துக் கவர்ந்துகொண்ட பசுக்கூட்டத்தை உரியவர் ஒன்றுகூடித் தடுப்பதுபோலத் தோழியர் குழாத்துடன் அவள் தன்கொழுநனது மார்பை எமது கை யகப்படாதபடி காக்கட்டும்.

'முழுநெறி' என்பதற்கு 'புறவிதழொடித்த முழுப்பூ' என்று புறநானூற்று 116ம பாட்டிற் 'குவளைக் கூம்பவிழ் முழுநெறி' என்ற விடத்து உரையாசிரியர் எழுதிய உரையால் அறிக. யாம் தலைவனும் தானும். அயர்கம் - முற்றெச்சம். சேறும் - செல்தும், செல்லுதும், செல்வோம். அஃது-அவ்வாறு யாம் செல்லுதலை. நுகம் - போர்ப்படையின் முன்னணி. பல்வேலெழினி - இவன் 'பல்வேலெழினி' என்றும், 'கூர்வேலெழினி' என்றும் அகத்தில் கூறப்பட்டுள்ளான்; (அகம். 105, 372). எழினி-'அஞ்சி' 'அதிகன்' என்ற மறுபெயரையுங் கொண்ட ஒரு சிற்றரசன். இவனது ஏவற்படைஞர் வேற்றுப்புலத்துச் சென்று ஆனிரை கவர்ந்து கொள்ளும் வல்லமையைக் கீழ்வரும் அகப்பாட்டடிகளால் அறிக:—

சில்பரிக் குதிரைப் பல்வே லெழினி
கெடலரு துப்பின் விடுதொழில் முடிமார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவல் லம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கள் மகிழின் முனைகடந்து
வீங்குமென் சுரைய வேற்றினந் தரூஉம்
பகைதலை மணந்த பல்லதர் (105)
* * * *
நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி
கடுமுனை யலைத்த கொடுவில் லாடவர்
ஆகொள் பூசலிற் பாடுசிறந் தெறியும்
பெருந்துடி. (372

'பெருநிரை போலக் காக்க'என்றது எப்படி எழினியின் வசப்பட்ட ஆனிரையை உரியார் மீட்பதரிதோ, அவ்வாறே தன்னகப்பட்ட தலைமகனைத் தலைவி மீட்டுக்கொள்வது அரிதெனப் பரத்தை தன் வல்லமையைத் தானே வியந்து கூறியதாம்.

வடம வண்ணக்கர்] 81 [குறிஞ்சி

பகற்குறிக்கண் தலைமகளைத் தலைமகனுடன் கூட்டுவித்தகன்ற பாங்கி, அக்கூட்டத்தின் இறுதிக்கண் பிரியலுற்ற தலைமகனை எதிர்ப்பட்டு, "ஐய, நின் விருப்பிற்கிணங்கி நின் வரைப்பட்ட இவளை நீ மணந்துகொண்டு பாதுகாத்தருளல் வேண்டும்'என்று ஓம்படைசாற்றிப் பின்னும் அவன் பகல்வந்தொழுகுங் களவொழுக்கத்னத விலக்கல் வேண்டி, உலகியல் மேம்பட அவனுக்கு விருந்து கூறுவான்போன்று, 'எம்மூர்க்கண் வந்து, எஞ் சிறுகுடிவிடைத் தேனுந் தினைமாவும் அருந்தி இராத்தங்கி ஏகலாம்' என்று வேண்டியது.

இவளே,
நின்சொற் கொண்ட வென்சொற் றேறிப்
பசுநனை ஞாழற் பல்சினை யொருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமா ருடையள்;
உதுக்காண், தெய்ய, உள்ளல் வேண்டும்,
நிலவு மிருளும் போலப் புலவுதிரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடறாழ் பெண்ணையெஞ் சிறுநல் லூரே.

(உரை) இங்குள்ளாளாகிய இவள், நினது சொல்லை உண்மையெனக்கொண்ட எனது வார்த்தையை நம்பி, பசிய அரும்புகளையுடைய பல கிளைகளோடுகூடிய ஞாழல்மரச் சூழலின் ஒருபுறத்தே முன் உன்னைக்கண்டு தனது (கன்னித்தன்மை பொருந்திய) புத்தெழிலை உன்பொருட்டு இழந்து அதனால் தனித்துவருந்தும் நிலையினள் ஆயினள்; ஆதலின் (அவ்வாறு அவள் வருந்தாவண்ணம் அவளை மணந்துகொண்டு பாதுகாத்தலை) மறவாது நினைத்தல் வேண்டும். அதோத் தெரிகின்றதே அதுதான், நிலவும் இருளும் போலப் புலால்நாற்றம் பொருந்திய கடலுங் கானலும் தோன்றும், மடல்கள் கீழே தொங்கும் பனைமரங்கள் செறிந்த எமது சிறிய நல்ல நெய்தல் நிலத்தூர்.

புலம்பு-தனிமை. மார் -அசைநிலை. உது - அது. 'உதுக்காண்'என்பது, தூரத்தே உள்ளதொன்றைச் சுட்டிக்காட்டும் ஒரு சொல்வழக்கு (ஐங்குறு 101, 453.). தெய்ய - ஒரு முன்னிலையசை. உள்ளல் வேண்டும்-மறவாமல் எம்மை என்றும் நினைத்தல் வேண்டும்.

'இவளே' என்றது, தலைமகளைக்காட்டி ஓம்படைசாற்றியது. 'உதுக்காண் எஞ்சிறு நல்லூரே' என்றது உலகியல் மேம்பட விருந்து விலக்கியது.

கடுவன் மள்ளனார்] 82 [குறிஞ்சி

குறித்தகாலத்தில் மீளாத தலைமகனது பிரிவாற்றாது தனித்துவருந்துந் தலைமகள், முன்பனிக் காலத்தால் தான் படும் துன்பத்தைத் தோழிக்குச் சொல்லி, நொந்து கூறியது.

வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்
பழா லென்றுநம் மழுதகண் டுடைப்பார்
யாரா குவர்கொல், தோழி, சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மருகாற்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யற்சிரம் வாரா தோரே.

(உரை). எனது நீட்சிபொருந்திய கடைகுழன்ற கூந்தலைக் கோதிப் பின்புறத்தே சேர்த்து, 'அழாதி' என்று சொல்லி எனது அழுத கண்களைத் துடைத்துத் தலையளி புரிந்தவராகிய காதலர், குறவர் மலைச்சாரலிடத்துப் பெரிய புனத்தின்கண் விளைத்த சிறு தினைத்தாளின் பக்கத்தே வளப்பமான அவரைக்கொடிகள் பூக்கும் அரிய குளிர்ச்சியோடுகூடிய முன்பனிக்காலம் வந்தும் தாம் இன்னும் வந்திலர். அவர் எத்தன்மையரோ? (யான் அறிகிலேன்.) தோழி, நீ சொல்வாயாக.

வார் - நீட்சி. வணர் - வளைவு, கடைகுழன்றிருத்தல். அழால் - (விகாரம்) அழல், அழாதே. யாராகுவர் கொல் - நம்மிடத்து அன்புடையாரோ, அன்பிலரோ என்று அறியேன். மருகால் - மருகில்; மருகு - மருங்கு, பக்கம். அவரை - முன்பனிக்காலத்துப் பூத்துக்காய்க்கும் இயல்புளது. இது தினைப்புனத்தே கொய்த தினைத்தாளின்மீது படர்ந்து பூத்துக் காய்த்தலை

சிறுதினை கொய்த இருவி வெண்காற்
காய்த்த அவரை (ஐங்குறு 286)

என்பதால் அறிக. அரும்பனி- தாங்குதற்கரிய பனி. அற்சிரம்' எனினும் 'அச்சிரம்' எனினும் ஒன்றே.

'யாராகுவர் கொல்' என்பதை மத்திமதீபகமாகக் கொண்டு, 'வாராதோர் யாராகுவர் கொல்' என்றும், 'அழுத கண் துடைப்பார் யாராகுவர் கொல்' என்றும் முன்னும் பின்னும் கூட்டி, "அற்சிரக்காலத்தும் நம்மை நினைந்து வாராதவரை எத்தன்மையராக நாம் நினைப்பது' அவரையன்றி நமது அழுதகண்ணைத் துடைத்துத் தேற்றத்தக்கார் வேறு யாவருளார்?' என்று பொருள்கூறினும் அமையும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[396-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

சிரிப்பு - நகை:—சிரிப் பென்பதும் ஓர் இயற்கைச் செயனிலையேயாம். ஆனால், அது மக்களிடை மட்டுந்தான் காணக்கிடக்கின்றது. சிரிக்கும்போது குரல்வளைத் தசைநார்கள், மூச்சுவிடும் தசைநார்கள், மார்படி வட்டம் (Diaphragm), முகத்தின் தசைநார்கள் முதலியன இயங்குகின்றன. வாயிதழ்கள் அகலமாகின்றன; பல்லெலாம் தெரிகின்றன. முகத் தசைநார்கள் இயங்கிச் சுருங்குகின்றன. கண்ணையும் மூடிச் சிரிக்கின்றோம். வயிறு குலுங்குகின்றது. இக் குலுக்கத்தால் உடல் வளைகிறது. முகம் சிவக்கின்றது. கால் தளர்கிறது. விழுந்து விழுந்து சிரிக்கின்றோம். சிலபொழுது சிரித்துப் புரள்வதும் உண்டு. குரல்வளையில் கிடக்கும் இரப்பை (glottis) மூடிக்கொள்கிறது. குலுங்கும்போது இவ்வாறு குரவிரப்பை அடிக்கடி மூடிக்கொள்வதால் 'கெ கெ-க்ர க்ர" என்ற ஒலிகள் எழுகின்றன. அடிநாக்குத் தடித்து அண்ணத்தைத் தொடுவதாலும் ஒருவகையான ஒலி உண்டாகிறது. இச்செயலில் பலவகையான தசைநார்களும் நரம்புகளும் தொடர்ந்து இயக்கமுறுகின்றன. ஆதலின் அவை இயைபுற்று விளங்குதல் வேண்டும். குழந்தையும் சிரிக்கின்றதாதலின் இவ்வியைபு பயிற்சியின் பயனன்று; இயற்கையமைப்பே யாகும். மக்கட் கூட்டத்தார் அனைவரிடை

யும் இவ் வியற்கைச்செயனிலை காணக்கிடக்கின்றது. சிரிப்பை அடக்குவது எளிதன்று. ஆனால் முயற்சி செய்தால் அடக்கி யாளுதல் கூடும்; போலிச்சிரிப்பும் சிரிக்கலாம். சிரிப்பு வரும்போது "சிரிக்கவேண்டும்" என ஓர் உள்துடிப்புத் தோன்றுகிறது. சிரிப்பு நிலையில், உணர்வின்றிச் செய்யப்படும் நடைமுதலிய செய்கைகளும் தடைபடுகின்றன நடந்துகொண்டே செல்பவன் கோமாளிக்கூத்தைக்கண்டால் நடப்பதை மறந்து நின்றவிடத்திலேயே நின்று சிரிக்கின்றான். இச் சிரிப்புநிலையில் பண்டைத்தமிழர் விளக்கியுள நகை யென்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. காட்சிப்பொருளை நகைப்பொருளாக உணர்ந்தால்தான் சிரிப்பு வருகின்றது. ஒத்துணர்ச்சியும் (sympathy) இவ்விடத்தே காண்கிறோம். பிறர் சிரிப்பது கண்டு நாமும் சிரிக்கின்றோம் அன்றோ? இவ் வியற்கை யமைப்பு, இனப்பொதுமை, உட்டுடிப்பு, வேற்றுச் செயல் தடை, மெய்ப்பாடு, உணர்வு, ஒத்துணர்ச்சி முதலியன எல்லா இயற்கைச்செயனிலையினும் காணப்படுவதால் சிரிப்பும் இயற்கைச்செயனிலையே என்பதில் என்ன ஐயம்?

ஆனால் மற்றைய இயற்கைச் செயனிலைகள் புறநிலையில் யாதேனும் ஒரு வேறுபாட்டை உண்டுபண்ணுகின்றன. மற்று இச் சிரிப்போ அத்தகைய வேறுபாடொன்றையும் புறநிலையில் உண்டுபண்ணுவதில்லை. இச் சிரிப்பின் முடிவுதான் யாதென்பதும் நமக்குத் தெளிவாக விளங்குவதில்லை. சிரிக்கும்போது நம்முடலும் மனமும் மாறுதலடைகின்றன. நம்முடல் வாட்டம் நீங்கித் தளிர்க்கின்றது. நமது மனதில் ஒரு "தெம்பு" உண்டாகின்றது.

இச் சிரிப்பு மகிழ்ச்சியின் வெளியீடு என்றனர் ஒரு சாரார். இம் மகிழ்ச்சி எங்கிருந்து வருகிறது. நுனிமரத்தில் நின்று அடிமரத்தை வெட்டுகின்ற காடனை ஒரு நாணன் கண்டபோது நாணன் சிரிக்கின்றான். ஏன்? காடனைவிடத் தான் பேரறிவாளி என்ற பெருமிதம் திடீரென்று அக்காட்சியின் பயனாக உள்ளத்தே எழுகின்றது. எதிர்பாராத இவ்வுயர்வால் மகிழ்ச்சி பொங்குகின்ற தென்கின்றார் ஹாப்ஸ் (Thomas Hobbes) என்ற ஒரு பெரியார். ஆனால், கோமாளியைக்கண்டு சிரிக்கின்ற நாம் அவனினும் உயர்ந்தவர்கள் என்றா எண்ணுகின்றோம்? கோமாளியை மெச்சியன்றோ புகழ்கின்றோம்? அவன் பெருமையைக்கண்டு "ஏற்றே இவற்கு நாம்" என்று கருத்தழிந்து அவனைப் பின்பற்றி நடக்கப் பயில்வார் ஒவ்வோர் ஊரிலும் பலரில்லையோ? அவ்வாறாயின் காட்சிப்பொருளின் இழிவையும், காண்பானின் உயர்வையும் கருதியுமே மகிழ்ச்சி பொங்குவதால் சிரிப்புப் பிறக்கின்றது என்று எவ்வாறு எடுத்தியம்ப இயலும்?

அன்றியும் நகையைவிளைக்கும் காட்சிப்பொருள்களாகிய கோமாளிக்கூத்து முதலிய நகைப்பொருள்கள் மகிழ்ச்சிப் பொருள்களா? அல்லவே அல்ல. தலைப்பாகையைத் தான் இருந்த இடத்தில் வைத்து வெளியேகுகின்றார் ஓர் ஆந்தையார்; பின் திரும்பி வந்ததும் தலைப்பாகை வைத்ததை மறந்துவிட்டு முன்னிருந்த இடத்தில் குந்தப்போய்த் தலைப்பாகையின் மேல் உட்காருகிறார். அதுகண்டு நாமனைவரும் நகைக்கின்றோம். மற்றொரு பேயன் ஒரு சிறு கொட்டுப்பிடி கொண்டு ஒரு சிறு ஆணியைத் தட்டும்போது, தன் விரல்மேலேயே தட்டிக்கொள்கின்றான். அது கண்டு சிரிக்கின்றோம். நாம் சிரியாமல் இருந்தால், தலைப்பாகை நசுங்குவதும், விரல் அடிபடுவதும் நம் கண்ணை வாட்டியிருக்கும் அன்றோ? உவகைப்பொருள் வேறு, நகைப்பொருள் வேறு. நகைப்பொருள்களை வேறொருவகையில் நாம் வெறுக்கும் பொருள்களேயாம். சிரிப்பதனால் அவ்வெறுப்பு மறையவே, ஆறுதலடைந்து மகிழ்கின்றோம். சிரிப்பு வாராமற் போனால் வருந்தி வாடுகின்றோம். சிறிய கொட்டுப்பிடி வீழாது ஒரு கோடாலி விரலின்மேல் விழுந்திருந்தால் என் செய்வோம்? தலைப்பாகைமேல் உட்காராது நேரே சென்று தரையோடு தரையாய்க் கொடிமூடிக் கிடக்கும் கிணற்றில் உட்காரக் கண்டால்என்செய்வோம்? நகைப்பொருள்கள் வருத்தத்தை விளைப்பன என்பதும் சிறு வருத்தந் தருவனவாய் நின்றால் சிரிப்பெழும் என்பதும், பெருவருத்தந் தருவனவானால் சிரிப்பெழாது வருத்தமே எழும் என்பதும் நன்கு விளங்குகின்றன வன்றோ?

தகுதியும் பொருத்தமும் பார்த்து நடத்தலே மக்கள் இயல்பு. தகுதியும் இயைபும் நாடாது முன்செய்ததையே பின்செய்துபோதல் பொறிகளின் (Machinery) இயல்பு. அரிசிகுற்றும் பெண்கள், உரலில் அரிசிகண்டால் குற்றத்தொடங்குவார்கள்; மண்ணைக் கண்டால் குற்றுவதை நிறுத்தி மண்ணை அள்ளி அப்புறப் படுத்துவர். ஆனால் அரிசிகுற்றும் பொறியோ, அரிசியையும்குற்றும், மண்ணையும் குற்றும். தலைப்பாகைமேல் உட்காருதல் முதலியன தகுதியற்ற செயல்களாம். ஆதலின் அவை பொறிகளை நினைப்பூட்டுகின்றன. மக்களாய்ப் பிறந்தார் பொறிகளைப்போல நடந்துகொள்ளும்போது நமக்குச் சிரிப்புப் பிறக்கின்றது. மக்கட் செயலையோ, மக்களறிவை நாம் ஏற்றிவைத்திருக்கும் நாய் முதலியவற்றின் செயலையோ கண்டபோதுதான் சிரிக்கின்றோம். எனவே நகைப்பொருள் மக்களின்செயல் ஆதல் வேண்டும்; அவை தகுதியற்றவையாய் இயைபற்றனவாய் விளங்குதல் வேண்டும். அல்லாக்கா லவை நகைப்பொருளன்றாம்.

மக்களை நல்வழியில் திருத்தும் ஒருகருவியே சிரிப்பென்பர் பெர்க்ஸன் (Bergsen) என்றபெரியார். பிறர் சிரிப்பது கண்டும், சிரிப்பிற் கஞ்சியும் பொறிநிலை நீங்கி மக்கள் நிலை அடைந்து பலரும் நடக்கின்றனராம். இந்நாளில் இவ்வியற்கைச்செயனிலை இவ்வாறு பயன்படுகின்றதென்பது உண்மையே. ஆனால் மக்கள் எந்நாளிலும் இவ்வாறு சிரிப்பிற்கு அஞ்சி நின்றனரோ? தொடக்கத்திலேயே இயற்கை இவ்வாறு இயங்கியது என்றுஎண்ண இடமில்லையன்றோ? கத்தியும்குத்தியும் (Fork)கொண்டு சோறுண்ணுவோனைக்கண்டு, பால்குடித்த அந்நாளிலும் அவன் இவ்வாறுதான் உணவு கொண்டான்என்றுசொல்வதுபோலா மிக்கொள்கை.

மிகுதியாய்க்கிடக்கும் நரம்புக் கிளர்ச்சி, பொங்கி வழியும் கலிங்கலே (Sluices) சிரிப்பு என்பர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) என்ற பெரியார். ஒரு குழந்தையைப் பிடித்துக்கொள்வோமானால், அஃது ஒன்றும் செய்யமாட்டாது கலங்குகிறது; கையையும் காலையும் வீசி அடைப்பட்ட

தன் நரம்புக்கிளர்ச்சியை அவ்வாறு பலவகையாலும் ஓடி வழியுமாறு செய்கின்றது. நரம்புக்கிளர்ச்சி வெள்ளம்பாய மதகுகள் பல இவ்வாறு உள்ளபோது சிரிப்பென்ற கலிங்கல் ஏன்?

அவ்வாறானால் சிரிப்பதுதான் எதுபற்றி? சிரிப்பது நமக்கு நல்லதாகின்றது. நாம் வாடி நிற்கும்போது, சிரிப்பூட்டுவாரை நாடிநிற்கின்றோம். சிரிக்கும்போது உடல் மாறுபாட்டோடு மனவேறுபாடும் உண்டாகின்றதெனக் கண்டோம். குருதிஓட்டம்மிகுகின்றது; நன்றாகமூச்சுவிடுகின்றோம்;கெட்டகாற்றை முழுதும் வெளிப்படுத்திவிடுகிறோம். நல்லகாற்று உட்புக இடமுண்டாகிறது. மூளையிலும், முகத்திலும் குருதி ஓடிப் பாய்கிறது. சிரிக்கும்போது முகம் சிவந்து போகின்றதல்லவா! களைப்புநீங்க ஒரு சுறுசுறுப்பும், தளர்ச்சிநீங்க ஒரு கிளர்ச்சியும் வாட்டம்நீங்க ஒரு மலர்ச்சியும் உண்டாகின்றன. மேலேசொன்ன, மனவேறுபாடுதான் என்ன? நாம் எண்ணிய எண்ணம், செய்தசெயல், வருந்திய வருத்தம் இவையனைத்தும் தடைபடுகின்றன. மனம்ஓர் ஓய்வடைகின்றது. தெம்பு ஒன்று தோன்றுகிறது. களைப்பு, வருத்தம்,வாட்டம், தளர்ச்சி என்பன மகிழ்ச்சிவெள்ளத்தில் அமிழ்ந்திப் போகின்றன. புத்துயிர் பெறுகின்றோம்.

ஆதலின் வருத்தம், களைப்பு வாட்டம் என்பவற்றிற்கு அடிமையாயவரே சிரித்துப்பிழைக்கவேண்டும்; இன்பமாய் வாழ்கின்றவன் சிரிக்கவேண்டுவதில்லை; சிரிப்பதும் இல்லை. ஆனால் முறுவலிப்பான். முறுவல் வேறு, சிரிப்புவேறு. முறுவலைப் புன்சிரிப் பென்பர். புன்சிரிப்பு என்பது சிறியசிரிப்பு எனப் பொருள்பட்டுப் புன்சிரிப்பும் சிரிப்பும் ஓரினத்தைச் சேர்ந்தவையே என்ற தப்பெண்ணத்தை உண்டுபண்ணுகிறது. ஆதலின் முறுவல் என்ற சொல்லையே நாம் இங்குப் பயன்படுத்துவோம். இயற்கைச்செயனிலை தடையேதும் இன்றி இயங்கித்தன் முடிவையடைந்தபோது ஓர் ஆறுதல் தோன்றுகின்றது. அவ் வாறுதலே முகமலர்ச்சியாம். அம்மலர்ச்சியின் நுட்பத்தை ஒரு பெரும் புலவர் "நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே" எனப் பாடுகின்றார். இம்முகமலர்ச்சியே முறுவலாகும். "புதியதோர் முறுவல் பூத்தாள்" எனக் கம்பன் பாடுவது காண்க. முறுவலோ முகத்திலுள்ளதொரு விளக்கத்தைத் தூண்டி அடங்கிக்கிடக்கும் அழகை எடுத்துக்காட்டுகின்றது. சிரிப்போ முகத்தைக் கோணலாக்கி அலங்கோலமாக்குகின்றது. ஆனால் சிரிப்பனைத்தும் முறுவலில் முடிகின்றது. இதனாலேயே இவ்விரண்டையும் ஒன்றென மயங்கினர் பலர். மற்றைய இயற்கைச்செயனிலைகள் தடையின்றி முடிவடைந்தால் முகமலர்ச்சியுற்று முறுவல் தோன்றுவதுபோலச் சிரிப்பென்னும் இயற்கைச்செயனிலையும் தடையின்றி வெளிப்படின் அதனால் ஏற்படும் ஆறுதல் முறுவலாக முகத்தில் மலர்கின்றது.

நகைப்பொருள்கள் வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டுபண்ணுவன எனக் கண்டோம். பிறரது வாட்டம் கண்டால் நாமும் வாடும் ஒத்துணர்ச்சி மக்களிடைக் காணக்கிடக்கின்றது. இவ்வொத்துணர்ச்சியே (Sympathy) மக்கட்கூட்டத்தைப் பிணித்துவைத்து ஒன்றாக்கி வளர்க்கின்றது. உலகத்தோடொட்டஒழுகலும் ஒத்ததுணர்தலும் இதனாலேயே உலகில் வழங்கிவருகின்றன. ஆதலின் ஒத்துணர்ச்சி மக்களிடை இன்றியமையாது வேண்டப்படும். ஆனால் தலைப்பாகை நசுக்குண்ணுதல் கண்டும் வாடிவதங்குவதென்றால் நம் வாழ்க்கை போமளவும் பெருநோயாக முடியுமன்றோ? ஆகையால், சிறுவாட்டம் சிறு வருத்தம் முதலிய உண்டாகும் நிலையில் ஒத்துணர்ச்சி பிறவாது சிரிப்புப் பிறக்கின்றது. அதனால் நம் வாழ்க்கையானது பெருநோ யாகாது அன்பு வாழ்க்கை யாகின்றது; இன்பவாழ்க்கை யாகின்றது. ஆனால் பெருவருத்தம் கண்டபோது அதற்கு அடிமையாக வேண்டுவது மக்கட்கூட்டத்தினது ஒற்றுமைக்கு இன்றியமையாததாம். ஆதலின் அந்நிலையில் வருந்திப் பிறர்வருத்தத்தை நீக்க முயல்கின்றோம். விரல்மேல் கொட்டுப்பிடி விழுந்தால் எதிர்நின்று சிரிக்கின்றோம்; கோடாலி விழுந்தால் பரிந்தோடி உதவுகின்றோம். சிறுசிறு வருத்தங்கள் நோயாக முடியாதபடி சிரிப்பு எழுந்தது என்பர் மக்கேல் என்ற பெரியார். ஒத்துணர்ச்கி சிறந்து விளங்கினால் தலைப்பாகை நசுக்குண்டாலும் என்றும் அழுதல் வேண்டுமாம்; ஒத்துணர்ச்சி சிறந்து விளங்காமற்போனால் மக்கட்கூட்டம் ஒன்றுபட்டு வாழ்ந்து உயர்வது கூடாதாம். இருதலைக் கொள்ளி எறும்புபோல் இவ்விரு முடிவிற்கிடையே வருந்திய மக்கட்கூட்டத்தைக் காப்பாற்றியது சிரிப்பேயாம். ஒத்துணர்ச்சியால் ஆயபயனும் கெடவில்லை; அதனால்வரும் கேடும் இல்லையாயிற்று. இளகிய மனதுடையவர்களே ஒத்துணர்ச்சிக்கு அடிமையாவர்; அவர்களே பெருஞ்சிரிப்பாளராக உலகிடை உலவி இக்கொள்கையை மெய்ப்பிக்கின்றனர். கன்மனக் கொடியர் சிரிப்பதேது? இதனாலும் ஒத்துணர்ச்சிக்கும் சிரிப்புக்கும் உள்ள தொடர்பு புலனாகவில்லையா?

அகராதிகள்.

	ரூ.	அ.
தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்களுடன்)—மூன்று பாகம் ...	18	8
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்
எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. விலை ரூபா 6 0 0.

வி. பி. செலவு வேறு.

விலாசம்:—"கலா நிலயம்" 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

இலஞ்சிப் பாவை.

[409-வது பக்கத் தொடர்ச்சி]

15. ஸ்ரீபாலன் மன்னனைக் காணல்.

என்னினைத்து வந்தானோ வவனிவனும் யாதுநினைத் திருக்கின் றானோ?—குசேலோபாக்கியானம்.

விஜயன் அகன்றபின் அவனைப் பின்றொடர்ந்த வீரர்கள் தத்தமக் கியைந்தவாறு பாடியும் பேசியும் சென்றனர். அவர்களுக்கு முன்னுற்ற மலைகள் பல; விரைந்தோடும் நதிகள் பல; தென்பட்ட கோபுரங்களும் பலவே. இவ்வாறவர்கள் செல்லலும் துண்ணென அவர் தலைவன் தன் னிவுளியை இழுத்து நிறுத்தி, துணைவனொருவனை விளித்து "அதோ நகர்ப்புறம் நோக்கி நடக்கும் ஒருவனைக் கண்டாயோ? எளியவர்க்கேற்ற உடையும், உருவமும், களிநல் யானையின் கம்பீர நடையுங்கொண்டு மலையி னுயர்ச்சியை மதியாது உதைத்துப் பின்புறம் தள்ளுபவன்போல் செல்பவன் யாரென்றும் எங்கிருந்து வருபவன் என்றும் சொல்ல உன்னால் இயலுமோ?" என்றான்.

துணைவன்:—இயலாது; ஆயினும் ஒன்று சொல்வேன். வேழமென வெதும்பும் போர்வீரர் கூட்டத்துள் இவன் போதக யூதபமாய் நிற்பவன்.

தலைவன்:—"சீச்சீ! இவ்வளவு தானோ நீ? அவனது நிலத்தைக் கைப்பற்றியிருக்கும் உனக்கு அச்சமாவது அழுக்காறுவது கூரிய நோக்கை உண்டாக்கவில்லையா? நெடுந்தூரத்திலேயே, அவன் அம்மலை மீதேறு முன்னமே, நானவனை இன்னானென்று கண்டுகொண்டேன். இந்நாடு முழுவதும் அவனைப்போன்ற உருவமும் நடையும் பெற்ற மானுடன் எவனும் இலன். அவன்தான் நாடு துரத்தப்பட்ட ஸ்ரீபாலன். ஓர் பகைவன் வருகையை அரசருக்கு நாம் முன்னுணர்த்த வேண்டும். அரசரும் முன்னறியாது அவனைச் சந்திக்கவுங் கூடாது. ஆகவே ஓடுவோம்வாராய்" என்று சொல்லி இருவரும் விரைவுடன் பரிமாவுதைத்துச் சென்றார்.

சபரியின் ஆச்சிரமத்தைவிட்டுக் கவலைசூழுள்ளத்தனாய் மெதுவே நடந்துசென்ற ஸ்ரீபாலனது மனதில் உள்ளமுடைக்கும் எண்ணங்கள் பல எழும்பலாயின. "நான் அஞ்சியது உண்மையாயது. மால்வண்ணன் சிறைப்பட்டுவிட்டான். வெம்மைசேர் இராதாகிருஷ்ணனும் விரைவில் சிறைப்படுவது திண்ணம். இவர்களுக்குற்ற விதியை விலக்கவேண்டியவன் நான்தான். நான் கொடுக்கப்போகும் இவ்வுயிர்ப்பலி வீணாகாம லிருக்கக்கடவது. எனது பெண்ணை அடைக்கலங் கொண்டு ஆதரிப்பதாய்ச் சபரியும் வாக்களித்துவிட்டாள். அருமையாய் வளர்ந்த அவளும், தாயிற் றயவுடைய தற்பரனது இணையடிக்கே அன்புபூண்டு, அவனது பணியிற் றன் வாழ்நாட்களைக் கழிப்பாள்! என் கண்களே! நல்வழியைக் கைப்பற்றும் அவளை நினைந்து கண்ணீருகுப்பது ஏதுக்கு? அன்னையிழந்த அவளை நான் வளர்த்த அருமை ஈதெல்லாம் நினைந்தென்பயன்? இப்போது இறப்பதே எனது கடன். முன்னொருகால் தன்னரசனால் கொல்லப்பட்ட எனது மூதாதையரொருவரது உடலை அகத்தே கொண்ட கல்லறைகளே! நாட்டில் மேன்மை பெற்ற பெருமகனொருவனை முன்னம் சிறைகொண்ட சிறைச்சாலைகளே! ஸ்ரீபாலன் உங்களை நாடி வருகிறான். அவனுக்கும் இடந்தாருங்கள். உனது உடல் காட்டிற் புதைக்கப்படாமல் நாட்டில் எனது சுற்றத்தாரிடை அடக்கஞ் செய்யப்படுதலும் ஒருவகையில் மேலானதே. ஆ! மகிழ்ச்சியை விளைவிக்கும் மணியோசை கேட்பதேன்? வீதிவாய் மங்கையரும் அவர்தம் மணாளரும் அவிர்சுடர்ப்பசும்பொற்கலன்க ளணிந்து, பட்டுத்தூசும் பலபடப்போர்த்துப் பல்லியமார்ப்பக் குழுமிக்குழுமிச் செல்வதேனோ? இதனால் இன்று விழாவெனக் காண்கிறது. அரசரும், வீரர் விற்போர்த்திறங் காட்டவும், மல்லர் முட்டியுத்தம் முடித்துக்காட்டவும், வேலெறி வீரர் தங்கள் வன்மை காட்டவும் கண்டு களிக்க இவ்விடம்வருவாராதலால் நானும் அங்குச்சென்று, வயது மூத்ததோ உடல் மூத்ததோ என அறிவதற்குப் பலமுறை யவர் புகழ்ந்துபேசிய எனது மொய்ம்பின் திறங் காட்டுவேன்" என்று செப்பி மறவருடன் மருவிச் சென்றான்.

கோட்டை வாயில்கள் திறக்கப்பட்டு, அகழியையணவும் பாலமும் தாழ்த்தப்படலும், ஆரவாரித்த மக்களும் அதன்மேற் சென்று பசும்புற் றரையிற் படர்ந்துநின்றனர். விரைவில் அரசனும் தன்னமைச்சர் ஆத்தானிகர் புடைசூழ அங்குற்று, வெற்றி முழக்கஞ் செய்யுங் குடிகளைக்கண்டு மகிழ்வுகொண்டு கரங்கூப்பியும், நல்லெழிலுடைய நங்கையரைப் புகழ்ந்து போற்றியும், அவர்தம் கொழுநருக்கு முகமலர்ந்து முறுவல்காட்டியும், ஆடலும் பாடலுங் காட்டும் அணியிழையாரை வியந்துபேசியும் கூட்டத்துள் மெல்லெனச் சென்றனன். முக்கிய குடிகளுக்கு முகமன் கூறியும், சிறுகுடிகளுக்குச் சிரக்கம்பஞ் செய்தும், ஒருவரையும் புறக்கணிக்காது சென்ற மன்னனை மக்களனைவரும் வாயார வாழ்த்தினர். இக்கூட்டத்துள்ளும் முகங் கோணினவர் சிலருண்டு. அவராவார் கோக்கள் வைகும் முற்றத்தானை மன்னனை வணங்கும் பெற்றியர், அவனாளுகைக் குட்பட்ட குறுநில மன்னர். தாமங்குறலால் மன்னனுக்குப் பெருமையும் தமக்குச் சிறுமையுமாதல், அவருள்ளந் தைத்தது. பின்னுஞ் சிலர், உயர் பிறப்பாளரென் றெண்ணியவர், பாமரர் மகிழ்ச்சியை யெள்ளி இறுமாந்து நடந்தனர். எந்நாட்டிலும் எக்காலத்திலும் நிறையறிவில்லா மாக்கள் தம்மின் மெலிந்தாரைக் கண்டு தருக்குதல் இயல்பு.

விரைவில் விழாவும் தொடங்கியது. அங்கு இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்; துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்; கண்வழி மனமுங் கையுஞ் செல்ல ஆடுநர் ஒருபால்; வாள்கொடு வலம்வந் தீண்டினர் ஒருபால். ஊர்தனிலுள்ள மங்கையர் மனிதர் கூட்டங்க ளவண; மாவினம் பலவின் மகிழ்தரு விநோதச் செய்கைக ளவண; வில்லினர் வாளினர் வீக்கிய கச்சினர், இல்லறத் துன்பம் இழந்த மாந்தரு மங்குக் குழுமினர்.

இவ்வாறு புதுக்களி தூண்ட உவகை வீற்றிருக்கும் முகத்தினரைக் கொண்ட அவ்விழாவினிடையே ஒருசார், வில்வீரர் கூடித் தமது திறங்காட்டிப் பரிசுபெற விழைந்து நின்றனர். ஆங்கு அரசனும் வந்துற்றான். மன்னனது படையிலுள்ள வீரர்கள் பலரும் கைவன்மை காட்டி மற்றவரெவரையும் தோற்கடித்து நின்றனர். அப் படைவீரருள்ளும் ஒருவன் சிறந்து விளங்கினான். அவனுக்கே பரிசுரித்தாயதென்று குடிகள் யாவரும் எண்ணியவேளை, ஸ்ரீபாலன் கூட்டத்தை விட்டுப் பிரிந்து, மூரி வில்லொன்றெடுத்து அரசர் காட்டிய குறி தவறாதெய்தான். பின்னர் இன்னொரு அம்பு தொடுத்து முன்னெய்த அம்பினை இருபிளவாக்க எய்தலுமே பொங்கிய ஆரவாரத்திற் களவில்லை. அவனுக்குப் பரிசாய் வெள்ளியம்பொன்றை யரசன் அளிக்குங்கால், கலங்கிய கண்ணினனாய் இன்னானெனத் தெரிந்துகொண்டதாய்க் காட்டும் அரசனது மந்தஹாசத்தையோ, மெச்சியதாய்ச் செய்யும் சிரக்கம்பத்தையோ எதிர்பார்த்த ஸ்ரீபாலனுக்கு ஒன்றும் கிடைத்திலது. முன்னறியாதவன்போலும், இவன்செயலை ஒருபொருட்டாய் எண்ணாதவன்போலும் அம்பை யளித்து அப்புறம் நடந்தானரசன்.

ஓரிடத்தில் குடிகள் யாவரும் வட்டமிட்டு நிற்க நடுவே மல்லயுத்தம் நடந்தது. மல்லயுத்த மாவீரரென மகுடம்புனைந்த இருவர் வந்தவரனைவரையும் வெரிங்கண்டு வீரவார்த்தைகள் கூறி யாவரையுங் கூவி அழைத்தார். அவர் அழைத்தது வீண்போகவில்லை. ஸ்ரீபாலன் அவரை அணுகிப் போர்புரிதலும், அவருள் ஒருவன் முடவனானான்; மற்றவன் அறிவுதப்பிக் கீழ் விழுந்துகிடக்க அவனது நண்பர் அவனைச் சுமந்து சென்றனர். இதற்குப் பரிசாய் ஒரு கணையாழி கொடுக்கப்பட்டது. விசும்பிற் றுளி வீழ்வது கல்லாய் மாறி விழல்போல், அரசனது நாட்டமும் அவ்வமயம் கருணையற்றுக் கவின, தன்னுள்ளத்தெழு மெண்ணங்களை எடுத்துச்சொல்ல ஸ்ரீபாலன் முயன்றும் அவனுக்கு வாயெழவில்லை.

முனிவுகொண்டு அவன், மெய்வலியாளர்பலர் வலிய பொருள்களைச் சேய்மைக்கண்ணெறிந்து தம்விறல் காட்டிநின்ற இடந்தனை யுற்றான். அவரவர் பொருள்களை வீசிய பின்னர், நிலனுற்ற பாறையொன்றை ஸ்ரீபாலன் பறித்தெடுத்து விண்ணிலெறிய, அது மற்றவர் எறிந்த தூரத்தைவிட இரண்டுகோலளவு அப்பாற்சென்று விழுந்தது. கண்டாரனைவரும் வியந்து கொண்டாடிக் கரகம்பஞ் செய்ய ஆரவாரமெங்கும் பொங்கியது. அரசனோ மீண்டும் அசட்டையோடு இச்செய்கைக்குப் பரிசாய பொற்கிழியொன்றைக் கொடுத்தனன். முன்னமே முனிவுகொண்ட ஸ்ரீபாலன் சினந்தெறிக்கும் சிறுநகையோடு அந்தக் கிழியினுற்ற பொருளனைத்தையும் அள்ளியள்ளி அனைவர்க்கு மெறிதலும், வறுமையிற் செம்மையுடையஇவ னாரென்று குடிகளெல்லா மவனைக் கூர்ந்து நோக்கினர். காரணைய கையும் உரம்பெறு உடலும் பெற்றவன் ஸ்ரீபாலனொருவனே என்று எங்கும் பேச்சரவம் பெயர்ந்தது. விருத்தர் அவனை நோக்கி அவனது மயிர் வெளுத்ததைக்கண்டு தலையசைத்து அவ னிளவயதில் செய்த வீரச்செயல்களைத் தமது பேரன்மார்களுக் குரைக்க, பெண்கள் நரைத்தும் திரைக்கா உடலைக்கண்டு வியந்து பேச, சிறுவர் இணையற்ற அவனது உருவத்தைக்கண்டு விம்மிதமெய்தினர். விரைவில் பேச்சரவம் பேராரவமாய்ப் பிறங்கியும் அரசனும் அவனது பரிவாரத்தினரும் பராமுகமாகவே இருந்தனர்.

மேனாள் ஸ்ரீபாலனோடுறவாடி அவனோடொருங் குண்டு அவனது செல்வத்தையெல்லாம் தமதேபோல் கையாண்ட நன்றியில் மாக்களும், போரில் அவன்பின் நின்று அவனது கொற்றத்தால் உயிர்பிழைத்த கயவரும் அரசனது முகத்தைக்கண்டு அதன்வழி தமது முகத்தைத் தீட்டி நின்றனர். அரசனெவ்வழியோ, அவனவையாரும் அவ்வழியே ஆவார் அல்லரோ?

189106.

விழாவில் ஊக்கங் குறையக்கண்ட அரசனுடனே ஓரிரலையை விடுவித்து, ஓடுமதைத் தனது நாய்களைக்கொண்டு பிடிக்கும்படி ஏவினான். அவ்வாறே ஏவலாளர்களும் மானொன்றைச் சிறைவிடுத்து அரசனது சுணங்க ளிரண்டினை யதன்மேலேவினர். ஸ்ரீபாலனை விட்டுப் பிரியாது அவனை யெங்குந் தொடர்ந்து செல்லும் சுணங்க னிக்காட்சியைக் கண்டு தனக்கும் ஒரு பரிசுண்டென்றெண்ணியோ அன்றிப் பழநினைவு கொண்டோ அரசனது நாய்களை விஞ்சியோடி மானைக் கௌவி யிழுத்துக் கீழ் வீழ்த்தியது. அரசவரண்மனையைச் சோராத வேறோர் நாய்க் குறுக்கே புகுந்து குறை விளைத்ததெனவெகுண்ட காவலர் வார்கொண்டதனைப் புடைக்க, ஓலமிட்ட அதன் குரல் ஸ்ரீபாலன் மனதில் ஊசியென உருவியது. அன்றுகாலையிலவன் பொறுததது அளவில்லை. தன்னை யண்டி இச்சகம் பேசி இரந்துண்ட ஈனர் பராமுகமும், அரசனது கருணையற்ற பார்வையும், குடிகள் இரக்கங் காட்டியுமவனைக் கொண்டாடாது அஞ்சியகன்றதும் ஊழ்வினையின் பயனெனப் பொறுக்க வேண்டியதாயிற்று.

ஆனால் தன் நாயடிபட்டவன் மனந் தாளவில்லை. சுணங்கனும் சுதஞ்சனைத் தோழன், அவளோடுகூடி விளையாடி அவளூட்ட வுண்டு அவளால் மலர்மாலைகளணியப் பெற்றுத் திரிந்தது, தன்னொடு உலவவும் தன் படுக்கையில் படுத்துறங்கவும் பாக்கியம் பெற்றுள அதனையடித்தது தன்னையே அடித்தது போன்றது. அதனை யெண்ணலும் தன் மகளது உருவம் நினைவுக்கு வர, உடனே கடுகடுத்த பார்வையவன் முகத்திற் றோன்றியது. அவன் முன்னடி வைத்து நடந்த வேகத்தைக்கண்டு நாற்புறம் மனிதர் விலகினது ஓடமோடப் பிரியும் நீரின் தொகுதியொத்தது. ஓங்கிய தோரடியே. அவன் சென்ற வேகத்தைக் கண்டவர், ஏவலாளன் கீழ்விழக் கண்டனர். அரசபரிவாரத்தினரனைவருள்ளும் பேரமலையெழுந்தது.

ஸ்ரீ—'போங்கள் பின்னால்' யாரென் றெண்ணினீர்கள்? ஸ்ரீபாலனது பேரைக்கேட் டஞ்சுங்கள். ஆம் அரசே! நெடுநாள் நாட்டிலும் காட்டிலும் நீங்கள் தேடிக் காணாத ஸ்ரீபாலன் இதோ உமது திருமுன்னர் நிற்கிறான். தனக்கென் றொன்றும் வேண்டாது தன் நண்பர்பொருட்டுத் தன்னைப் பலியிட இவ்விடம் தோன்றினான் அவனது சரணையேற்று, வீணில் மூளும் போரை நிறுத்துங்கள்! அவனைச் சிரச்சேதம் செய்து சாந்தியுடையுங்கள்!

அ:—'எனது இரக்கத்திற்குக் கைம்மாறிதோ! அந்த மலைநாட்டுக் குடிகளிலெல்லாம், தாயே யனைய

எனது அன்பின் பெருக்கத்தைப்பெற்றும் நல்லுணர்ச்சி யிழந்தவன் நீயே. வளர்த்த கடா மார்பிற் பாய்ந்ததென்ன எனக்குப் பகைவனுமானாய் என் முன் என் ஏவலாளனை அடித்ததுமன்றி கர்வங்கொள் பார்வையுடன் நிற்பதைக் கண்டு மிருப்பதோ? ஓ' காவலாள! இவனைப்பிடித்துச் சிறையிலடை'! என்றனன். இதற்குள் நாற்புறமும் குழப்பமுண்டாயிற்று. கூட்டத்தைக் கலைக்க அரசன் 'உடனே உத்தரவிந்தனன்.

பார்த்திபனுரைப்பக் கேட்டப் பப்பார் நெருங்கிச் சீறி குதிரையைக் கூட்டத்தினடுவண் விடலும், ஆசையுடனன்று புறப்பட்டுவந்த மக்கள் அல்லற்பட்டனர். அவர் புகல் வசையும் சாபமும் காவலர் காதுகளிற் கெட்டில. கிழவரும் மெலிந்தாரும் கீழ் விழுந்தனர். குழந்தைகள் பெற்றோரைப் பிரிந்தனர்; அச்சமுற்றவர் அகன்றோடினர்; மெய் நடுங்கிய மகளி ரோலமிட்டனர். எங்கும் அவலக்குரல் கிளம்பிற்று. இதனால் சினமூண்ட வாலிபர் பலர் கையிற்கிடைத்த கோல்களைக்கொண்டு போர்புரிய முன்னிட்டனர். உடனே வேல்தாங்கிய படைவீரர் ஸ்ரீபாலனை வட்டமிட்டுச் சுற்றி முன்னடத்த, குடிகள் ஒழுங்கில்லாது பின்பற்றி, வையவும் கற்கள்கொண்டெறியவும் தலைப்பட்டனர். போரை யகற்ற முன்வந்தும் தன்னால் குழப்பமும் உயிர்ச்சேதமும் உண்டாகுமென்று அஞ்சிய பெருந்தகை தன்னைச் சிறைப்படுத்திய தலைவனை நோக்கி, "உனக்கு விற்போர் கற்பித்து, அரச சமூகத்திற் கழைத்துப்போய் இவ்வேலையி லமர்த்தியவன் நானே யாதலால், நான் செய்த நன்மைக்கு மாறுதவியாக ஒருகணம் என்னைப் பேசவிடு" என்னலும் அவனும் தலையசைக்க ஒரு பாறைமீதேறிப் பின்வருமாறு பேசலுற்றான்:—

"என்னிடம் அன்புகொண்ட நண்பர்களே! எனக்காக நீங்கள் வழிதப்பி, நீதிதவறி, அரச ஆணை கடந்து முறைகெட நடந்து கொள்ளுமுன், வயது சென்றவனும், உலகத்தில் பலவகைப்பட்ட அனுபவங்களைக் கண்டவனுமாகிய என்னுடையவார்த்தைகளைச்சற்றே செவிகொடுத்துக் கேளுங்கள். என் உயிரையும், என் கௌரவத்தையும், என் வீரச்செயல்களையும் அரசருக்கே நான் அர்ப்பணம் பண்ணுகிறேன். அவர் சட்டப்படி என்னையும் என்னுடலையும் நடத்துவதில் எனக்கு முழுச் சம்மதமுண்டு

"சட்டங்களுக் கடிமையாய் நானடக்கவிருக்க, நீங்களென்னோ முறைகெட முனிவு கொள்வது? நமது அரசரது செங்கோ லென்ன கொடுங்கோலாய் மாறிவிட்டதா? அவர் பிழைத்து நடந்தாலல்லவோ நீங்களும் சீற்றங்கொள்ளவேண்டும்? இதுவரை நீதியும் கருணையும் நிறையுடன் நமக்குக் கலந்தளித்த காவலன் என்னளவிலோ பொய்த்துவிடப் போகிறான்? அன்றி அவ்வாறே அவர் நீதிகெட நடந்தாலும், என்னொருவனது உயிரையோ பெரிதாயெண்ணி, எனது மனதிற் கறுக்கொண்டு, புரவலன்மீது பழிவாங்க, குடிகளின் நன்மையைக் கருதாது நானும்மையவர்மீ தேவி, இவ்வற்ப யாக்கையைப் பாதுகாக்கவோ குடிகளை யெல்லாம் சாவுக்குள்ளாக்குவேன்! என்னையும் உம்மையும் கட்டுப்படுத்தும் அன்பாகிய பாசத்தை வீணில் நானறுத்துத் தள்ளினால் என் மனது அமைதியடையுமோ? அதோதோன்றும் சிறையில் நானடைபட்டிருக்குங்கால், நமது பகைவர் மேற் செலுத்தப்படவேண்டிய படைக்கலங்கள் எனது நண்பர்மேலேயே எய்யப்பட்டன வென்றும், ஒன்னலரை ஒறுக்கும் வாள்கள் நமது சுற்றத்தார் சோரியிலேயே தோய்ந்ததென்றும் நினைக்க என் மனம் என்ன புண்படும். ஓ! என்னருமைச் செல்வர்காள்! வேண்டா! வேண்டா! என் பொருட்டாகத் தாய் தன் பிள்ளையை நினைந்தழவும், மனைவி கொழுநனை யெண்ணிக் கதறவும், சிறு குழந்தைகள் தகப்பனைக்கூவி வருந்தவும், முதியோர் தங்களுக் காதரவான வாலிபரை நினைந்து அழைக்கவும், யாவரும் ஒருங்கே என்னைச்சபிக்கவும் நான்தரியேன்,தரியேன்! சற்றே பொறுமைகொண்டு இக்கோலங்களை யெல்லாம் வராது காத்து, அமைதியுடன் இல்லம் புக்கு எனக்காகச் சற்றே பரிவு கூர்ந்து அன்பு காட்டுவீராகில், நானும் உமது மாறா அன்பைப் பெற்றேன் என்று அகங்களிப்பேன்" என்றான்.

இதைக் கேட்டலும் குழப்பம் அடங்கிற்று. புயல் காற்று நீங்கி மழைபெய்வதுபோல், அலைப்புற்றல்லற்படுத்திய சினம் மாறி யனைவர் கண்களிலும் நீர்ததும்பிற்று. எல்லோரும் இறைவனிணையடியிலிதயம் வைத்தவராய், இருகரங்களையுங் கூப்பி, தன்னுயிர்க் கிடுக்கண்ணுரைத்ததைப்பாராது, பிறருயிரையேபெரிதாய்ப் பாராட்டிக் கலகத்தை நிறுத்திய பெருந்தகையைக் காக்கவேண்டினார்கள். உட்கலகத்தை மாற்றியவனைக் கிழவர் வாழ்த்தினர்; தாயர் தங்கள் குழந்தைகளைத் தலைமேல் தூக்கி அவரது தகப்பன்மாருயிரைக்காத்த மேலோனை "அப்பா அதோபா ரவரை, பிறர் நன்மை நாடும் பேரறிவாள னவன்" என்று காட்டிக் கண்ணீர் விட்டுக் கலங்கினார்கள். உற்சாகத்தால் சிலரும், துன்பத்தால் சிலரும், மாறுபட்ட பற்பல எண்ணங்களாற் சிலருமாய்க் கண்ணீர்விட்டுக்கதற, ஸ்ரீபாலனைச் சிறைசெய்யச் சென்ற வீரரும் மனங்கசிந்து, தாஞ் செய்யும் பணி தவறானதென்றெண்ணி நாணி நடந்து கோடிய சென்னியோடும், நீடியபெருமூச்சோடும் குறித்த காவலிற் கொண்டுசேர்த்துத் தலைமறைந்தனர்.

புரவலன் சினத்தோடு புறத்தே நடந்துகொண்டு, "இம்மூடர்களுக்கு யார் அரசனாயிருக்கவிரும்புவார்; ஸ்ரீபாலனுக்கு ஜயமுழக்க மெழுவதைக் கேட்கவொண்ணுமோ? இன்றுகாலையில் இதேபோ லவர்களென்னை வாழ்த்தினர்; ஸ்ரீபாலனது செல்வாக்கை நான் கெடுத்தொழித்த நாளிலும் இவ்வாறே என்னைக் கொண்டாடிக் கூவினர். ஸ்ரீபாலன் இப்போது என்னைத் துரத்திவிடினும் இவ்வாறே ஆரவாரிப்பார்கள். இவர்களுக்கு இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன? மனம் போனவழியெல்லாம் அன்பைச் செலுத்துவதும் நிலையில்லாததும் வீணடம்பரத்தை விரும்புவதும் கொடிய இயற்கை கொண்டதுமான இக்கூட்டத்திற்கு யார் அரசனாயிருக்க விரும்புவார்? கணத்திற்குக்கணம் மகளிர் உள்ளமெனவும் கனவிற்காணும் பொய்த்தோற்றம் போலும், காய்ச்சலால் அறிவிழக்கும்போது கண்முன் றோடும் பாபத்தோற்றம் போலும் மாறும் இயல்புடைய இவரோ எனது குடிகள்" என்று வெறுத்துக்கூறினான். இதற்குள் ஒற்றனொருவன் ஓடோடியும் வந்து "அரசே! நகரத்தை விட்டுத் தனியே நீர் நெடுந்தூரம் செல்ல வேண்டாவென்றும், இவ்விழாவைக் கோட்டையினுள்ளே

யே முடிக்கவேண்டுமென்றும் மாறப்பிரபு பிரார்த்திக்கிறார். காரணமின்றி இராதாகிருஷ்ணனது போர்வீரர் படைதிரண்டு நிற்கின்றனர். இன்றுகாலை மாறப்பிரபுவும் படைதிரட்டி அவ்விடம் சென்றார். ஸ்ரீபாலனுக்கு உதவியாய் இராதாகிருஷ்ணன் படையெடுத்துள்ளான்போலும். இன்று போர்மூள்வதுஉண்மை"

அ:—ஓகோ! நான் மறந்தேன். இந்த விழாவின் ஆடம்பரத்தில் என் வேலையை மறந்தேன். நீ விரைவிற் சென்று இராதாகிருஷ்ணன் நமது பரிவாரத்தாரொருவரால் சிறைப்படுத்தப்பட்டா னென்றும், ஸ்ரீபாலன் தானே சரணடைந்து நமது நீதிக் குட்பட்டிருக்கிறானென்றும் மாறனுக்குத் தெரிவித்து எவ்விதத்திலும் போரை நிறுத்து. தலைவர் நீங்கினார் என்று கண்டுகொண்டால் வீரர் விரைவில் பிரிந்துவிடுவர். தலைவர் ஆணைக் கடங்கிவந்த அவர்களை யொன்றுஞ் செய்யக்கூடாதென்பது என் கட்டளை என்று மாறனுக்குத் தெரிவி. வந்த வேகத்தைவிட மேலான வேகத்தோடு ஓடு குதிரைக்காகப் பாராதே. அது இறந்தால் நமது குதிரைகளிற் சிறந்ததொன்றை உனக்களிப்பேன்'

"அண்ணலே இதோ செல்கிறேன். இந்தப் பசும் புற்றரையைக் கடப்பதன்முன் போர் மூள்வது உறுதி." என்று சொல்லித் தூளி பறக்க வோடினான் தூதனும்.

எஞ்சிய ஆட்டங்களெல்லாம் நிறுத்தப்பட்டன. குடிக ளங்கங்கே கூடித் தாழ்ந்த குரல்களிற் பேசிக்கொண்டிருந்தனர். ஊர்முழுவதும் முணுமுணுத்த பேச்சேயொழிய வேறில்லை. பெரிய போர் மூண்டிருக்கிறதென்றும். உட்கலக முண்டாகப்போகிற தென்றும், மாறன் இராதாகிருஷ்ண னிவர்கள் கைகலக்கிறார்களென்றும் மலைநாடு முழுவதும் குழப்பமென்றும் ஊரில் வதந்தி உலவியது. ஸ்ரீபாலன் அடைபட்ட சிறைச்சாலையும் முன்னமவன் மூதாதையடைபட்ட சிறைச்சாலையே யென்று சிலர் சொல்ல, திடுக்கிட்ட குடிகள் உதட்டின்மேல் கை வைத்துச் சொன்னவரை வேறொன்றும் பேசாதிருக்கப் பணித்தனர். இதற்குள் இரக்கங் கொண்ட இரவியும் இச்செயல்களைக் காணத் தரியாது மறைதலும், வேகத்தா லிளைத்த ஒரு ஒற்றன் நகர்ப்புறஞ் சேர்ந்தனன். வண்ணக்கரைப் பிரதேசத்தில் பகலிரண்டு முதல் இரவுவரைப் போர் மூண்டதென்றும் அதன் முடிவு கண்டு கொள்ளக் கூடவில்லை யென்றும் ஊரில் பேச்சு நிகழ்ந்தது. ஊரும் கவலையோ டுறங்கிற்று.

இவுளி - குதிரை. வேழம் - யானை. போதக யூதபம் - யானைக் கூட்டத்திற்குத் தலையானை. அழுக்காறு - பொறாமை. பரிமா உகைத்து - குதிரையில் ஊர்ந்து. தூசு - ஆடை. பல் இயம் - பலவகை வாத்தியங்கள். மொய்ம்பு - வலிமை. மறவர் - போர்வீரர். புறக்கணித்தல் - அலக்ஷியஞ் செய்தல். அவண - அவ்விடத்திலிருந்தன. மூரி - வலிமை. வெரிந் - முதுகு. சேய்மை - தூரம். விறல் - வலிமை. சிரக்கம்பம் - தலையை அசைத்தல். இரலை - மான். அசுழம் - நாய். ஒன்னலர் - பகைவர்.

தமிழ்ப் பாடம் 124.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[415-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பிதாம கன்பரி வுடன்முனிந் துசில
பேச நாசமுறு போரனும்
விதார மொய்ம்பனும் விதுர னல்லது
வில்வல்ல வீரர்பிற ரில்லையோ
வுதார சீலனுய ரங்கர்கோன் வரிவி
லொன்றுமே யமையு முற்றெழும்
பதாதி யோடம ரிலைவரும் படம
லைந்திடப் பரணி பாடவே. 64

பரிவுடன் பேசிய பீஷ்மனுக்குத் துரியோதனன், விதுரனில்லையேல் வீரர் வேறொருவரு மில்லையோ என்று எதிர் கூறுகின்றான்.

பதவுரை.

பிதாமகன் - பாட்டனாகிய பீஷ்மன், பரிவுடன் - வருத்தத்துடன், முனிந்து - கோபமடைந்து, சில பேச - சில வார்த்தைகளைச்சொல்ல, நாசம் உறும் - நாசத்தை அடையும், போரனும் - போரனாகிய, விதாரம் - போரில், மொய்ம்பனும் - பராக்கிரமம் பொருந்திய துரியோதனனும்,

விதுரன் அல்லது- விதுரன் தவிர, வில் - வில்வித்தையில், வல்ல - வல்லவர்களான, வீரர் பிறர் - வேறு வீரர்கள், இல்லையோ - இல்லாது போயினரோ?

உதாரசீலன் - ஈகைக்குணத்தில் சிறந்தவனும், உயர் - உயர்ந்த, அங்கர்கோன் - அங்கநாட்டு அதிபதியுமான கர்ணனது, வரி - கட்டு அமைந்த, வில் ஒன்றுமே - ஒருவில் மாத்திரம், அமரில் - போரில், உற்று எழும் - பொருந்தி எழுகின்ற, பதாதியோடு - சேனைகளோடு, ஐவரும் - பாண்டவர்களும், பட - இறக்கும்படி, மலைந்திட - யுத்தம் செய்யவும், (அதனால்) பரணிபாடவே - என் வெற்றியைச் சிறப்பித்துக் கவிகள் பரணிபாடவும், அமையும் - போதியதாக அமையும் (என்று கூறினான்.)

நீயி ருக்க நெடுவிற்கை யாசிரிய
னவனி ருக்க நிகரற்றவன்
சேயி ருக்க விறன்மன்ன ரிப்படித்
திரண்டி ருக்கவெதிர் சென்றுநீள்
வேயி ருக்குமித ழிடைய னுக்குநல்
விருந்து செய்தவன் வெறுக்கிலென்
போயி ருக்கிலென் முறிக்கி லென்சிலை
மலைந்தநம் மொடெவர் போர்செய்வார் 65

'வீரர் பலர் இருக்க விதுரன் இருந்தால் என், போனால் என்' என்று பின்னும் துரியோதனன் வீரம் பேசுகின்றான்.

பதவுரை.

நீ இருக்க - நீ இருக்கையில், நெடுவில்கை - பெரிய வில்லைக் கையிற்கொண்டுள்ள, ஆசிரியன் - ஆசிரியனை, அவன் இருக்க - துரோணன் இருக்கையில், நிகர் அற்றவன் - தனக்கு நிகர் இல்லாத துரோணனுடைய, சேய் இருக்க - பிள்ளையாகிய அச்வத்தாமன் இருக்கையில், விறல்மன்னர் - வலிமை பொருந்திய அரசர்கள், இப்படி - இந்தவிதம், திரண்டு இருக்க - குவிந்திருக்கையில்,

நீள் - நீண்ட, வேய் - புல்லாங்குழல், இருக்கும் - பொருந்தி இருக்கும், இதழ் - உதடை உடைய, இடையனுக்கு - இடையனாகிய கிருஷ்ணனுக்கு, எதிர்சென்று - எதிர்கொண்டு சென்று, நல் - நல்ல, விருந்து செய்தவன் - விருந்திட்டு உபசரித்தவனாகிய விதுரன், வெறுக்கில் என் - வெறுத்தால் என்ன, போய் - பகைவர்பக்கம் போய், இருக்கில் என் - இருந்தால் என்ன, சிலை முறிக்கில் என் -வில்லை முறித்தால் என்ன,

நம்மொடு - நம்மோடு, எவர் - எவர், மலைந்து - எதிர்த்து, போர்செய்வார் - போர்செய்ய வல்லவர்.

இலக்கணம்.

இரண்டுமுதல் ஏழுவரையிலுள்ள வேற்றுமைத் தொடர்களிலும் எழுவாய்த்தொடரிலும் விளித் தொடரிலும், யகர ரகர ழகர மெய்களிலொன்றையேனும், உயிரையேனும் இறுதியிலுடைய நிலைமொழி, வல்லினமெய்யை முதலிலுடைய வருமொழியோடு புணருங்கால் அவ்வல்லினமெய் மிகுந்து சிலபோதும் மிகாது சிலபோதும் புணர்கின்ற விதிகளை இதுவரையில் ஓதினோம். இனி வினைமுற்றுத்தொடர், வினையெச்சத்தொடர், பெயரெச்சத்தொடர், உரிச்சொற்றொடர், இடைச்சொற் றொடர், அடுக்குத் தொடர் ஆகிய தொகாநிலைத்தொடர்களிலும், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, ஆகிய தொகைநிலைத்தொடர்களிலும் வருமொழிமுதல் வல்லினமெய் நிலைமொழியீற்று யகர ரகர மெய்களோடும் உயிர்களோடும் புணரும் வகைகளைக் காண்போம். இத்தொடர்களின் இலக்கணங்களை முன்னர்ப் பலவிடங்களில் கூறியிருக்கின்றோமாதலால் மறுபடி இங்குக் கூறவில்லை.

I. வினைமுற்றுத்தொடர்: —

ஓடின குதிரை, பாடினர் கவிகள், எழுந்தது குதித்தது, என்பனபோல் நிலைமொழி வினைமுற்றுக்களாயிருக்குந் தொடர்கள் வினைமுற்றுத் தொடர்களாகும். வினைமுற்றுக்கள், குறிப்பு என்றும் தெரிநிலையென்றும் ஏவல் என்றும் முன்னிலையென்றும் வியங்கோளென்றும், உடன்பாடென்றும், எதிர்மறையென்றும், தன்வினை யென்றும் பிறவினை யென்றும், செய்வினை யென்றும் செயப்பாட்டு வினையென்றும் பலவகைப்படும் (வால்யூம். 1. பக்கம், 1015, 1016, 1017).

I வினைமுற்றுத்தொடரில், அது எவ்வகை வினைமுற்றாயிருப்பினும், வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பான்மை மிகாமலே புணரும் என்னலாம்:—

சென்றனர் + சிறுவர் = சென்றனர்சிறுவர்—தெரிநிலை
பெரியது + பசு = பெரியது பசு—குறிப்பு.

வாராய் + குமர = வாராய் குமர
பேசு + சிறுவ = பேசு சிறுவ } ஏவல்

வருக + பெரியோய் = வருகபெரியோய்
வாழி + கொற்றவ = வாழி கொற்றவ } வியங்கோள்

வந்தீர் + பெரியீர் = வந்தீர் பெரியீர்—முன்னிலை.
உண்ணு + குதிரை = உண்ணு குதிரை—எதிர்மறை
ஓடினர் + சிலர் = ஓடினர் சிலர்—தன்வினை
ஆட்டினர் + குரங்கினை = ஆட்டினர் குரங்கினை—பிறவினை.
குலுங்கியது + பூமி = குலுங்கியது பூமி—செய்வினை.
அழிக்கப்பட்டது + காடு = அழிக்கப்பட்டதுகாடு—செயப்பாட்டுவினை

II பெரும்பான்மை மிகாமலே புணரும் என்று கூறினோமாதலால், சிறுபான்மை வல்லினமெய் மிகுந்து புணரவுங் கூடும்:—

(a) நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தில் முடிகின்ற ஏவலல்லாத மற்ற வினைமுற்றாயிருக்குமாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

கூவிற்று + கோழி = கூவிற்றுக்கோழி
சிறுகட்டு + களிறு = சிறுகட்டுக்களிறு.
(கட்டுஎன்பது, கண் + து எனப்பிரிந்து கண்ணையுடையது என்று பொருள்படும் குறிப்பு வினைமுற்று)

குறிப்பு:—நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தில் முடியுமாயினும் ஏவல்வினைமுற்றாயிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது:—

நடத்து + பாகனே = நடத்து பாகனே.
கிடத்து + குழவியை = கிடத்து குழவியை.

(d) நிலைமொழி நோ (வருந்து), து (உண்), என்னும் ஏவல்வினையாயிருக்குமாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகும்.

நொ + குமர = நொக் குமர.
து + குமர = துக் குமர.

J. வினையெச்சத் தொடர்.

I நிலைமொழி வினையெச்சமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகுந்து புணரும்:—

போய் + பார்த்தான் = போய்ப்பார்த்தான்.
எடுத்து + போட்டான் = எடுத்துப்போட்டான்
கூடி + சென்றான் = கூடிச்சென்றான்.
பார்க்க + போனான் = பார்க்கப்போனான்
தருபாக்கு + சென்றார் = தருபாக்குச்சென்றார்.
(உணவு)இன்றி + சேர்ந்தார் = (உணவு)இன்றிச் சேர்நதார்.
காணு + கலங்கினன் = காணுக் கலங்கினன்.

II பெரும்பாலும் மிகும் என்றதால், மிகாமற் புணர்கின்ற இடங்கள் பின்வருமாறு:—

(a) நிலைமொழி செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாயின், வருமொழிமுதல் வல்லின மெய் மிகாது.

காணிய + சென்றேன் = காணிய சென்றேன்.
கொல்லிய + புகுந்தான் = கொல்லிய புகுந்தான்.

(b) நிலைமொழி, உயிர்த்தொடர், இடைத்தொடர் மென்றொடர்க் குற்றியலுகரங்களை ஈற்றிலுடையதாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது:—

அழுது + புரண்டாள் = அழுதுபுரண்டாள்—உயிர்த் தொடர்

வந்து + சேர்ந்தான் = வந்து சேர்ந்தான்
நின்று + பார்த்தான் = நின்றுபார்த்தான்
கண்டு + தொழுதான் = கண்டு தொழுதான் } மென் றொடர்.

செய்து + சென்றான் = செய்து சென்றான்- இடைத் தொடர்.

K. பெயரெச்சத்தோடர்.

நிலைமொழி பெயரெச்சமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

உடைந்த + பலகை = உடைந்த பலகை
அழுகிற + குழந்தை = அழுகிற குழந்தை
காணாத + காட்சி = காணாத காட்சி
செய்த + பெட்டி = செய்த பெட்டி.
பெரிய + தாழை = பெரியதாழை
நல்ல + சங்கு = நல்லசங்கு

குறிப்பு:—நிலைமொழி ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயிருந்தால் (வால்யூம் 1. பக்கம் 5!) மாத்திரம் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

காணா + கண் = காணாக்கண் (காணாத கண்)
பாயா + புலி = பாயாப்புலி (பாயாத புலி)
கேளா + செவி = கேளாச்செவி (கேளாத செவி)

குறிப்பு:—உண்ணா, ஓடா, நில்லா என்பனபோலிருக்கும் செய்யா என்னும் வாய்பாட்டு வினை, எதிர்மறை வினைமுற்றாகவும், உடன்பாட்டு வினையெச்சமாகவும், எதிர்மறை வினையெச்சமாகவும், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும் வரக்கூடுமென்பதை முன்னரே கூறியிருக்கின்றோம். இது, புல்உண்ணா புலிகள், என்பதுபோல் எதிர்மறை வினைமுற்றாய் வரும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது. மற்ற இடங்களில் எல்லாம் மிகும்.

கம்பராமாயணம்.

அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[416வது பக்கத் தொடர்ச்சி]

போகம் புசிக்குமோரு சோகச் சித்திரம்.

முதல்வ னெவ்வழி அவ்வழியே அவனைச் சார்ந்தோரும் ஒழுகுதல் இயற்கை. நாடக வொற்றுமையின் நுண்ணிய உணர்ச்சியால் வான்மீகமுனிவரும் கம்பர்பெருமானும் தீட்டுகின்ற சித்திரம் வெவ்வேறாயினும், அவ்வழிச் சித்திரத்திற்குரிய உண்மை பிறழாமல் நாடகத்தை நிகழ்த்திவைக்கின்ற அருமையைத் தேர்வா ருள்ளம் களிகூரும். போகமே பெரிதெனப் பரிந்த சிந்தைத் தயாதன் மனப்பான்மையைக் காட்டிவந்த வடமொழிமுனிவர் இவ்வியற்கையை அவன் மனையுளோர்களுக்கும் அளிக்க மறந்திலர். போகத்தில் ஒரு நோக்குடையவர்களாய் அவர்களை அமைக்கின்றனர். போகிகளுக்குரிய பயம் பெருமிதம் பக்ஷபாதம் பொறாமை சுயநயம், முதலிய குணங்களையும் அவர்மாட்டு ஒவ்வோரளவு மிகவும் நுட்பமாய்க் காணலாம். பரதனது அற்றம் நோக்கியே இராமனை அரசனாக்க வேண்டுமென்று விரைந்த தயரதன், உலக இயலிற் கிணங்கினனாயினும் ஒரு தனிப் பெருமைக்கு அயலேயாய் நிற்கின்றான் என்பதற் கையமில்லை. தனக்குறுந் திருவினைச் சென்று, "அன்னாய், நாளை யான் முடி சூடுவேன். எனக்குஞ் சீதைக்கும் நாளைச் சுபத்திற்காக நீங்கள் என்ன என்ன மங்களங்களைச் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாஞ் செய்யுங்கள்" என்று கௌசலையினிடம் கூறிய இராமன் தனக்கும் தன் சீதைக்கும் மங்களம் பெருக வேண்டுமென்பதையே மனத்திற் கொண்டனன். அவ்வேளை, கௌசலையும், "ஏதாவது இடையூறு இருப்பினும் அது நசித்துப்போகட்டும். நீ எப்பொழுதும் என்பந்துக்களையும்சுமித்திரையின்சுற்றத்தார்களையும் சந்தோஷப்படுத்தி வைப்பாயாக" என்று வேண்டுங்கால், இடையூறொன்று நேரினும் நேரலாம் என்ற அச்சத்திற் கிடந்தவளாவதுமன்றி இராமன் அரசனாவது தன்னுடன் தன் அன்பிற்குரியவர்களுக்குங் களிப்பூட்டி வைப்பதற்கே என்னும் கருத்துடையளாதலையுங் காட்டுகின்றாள். இந்த நினைவுடைய கௌசலை, கைகேசியை அக் களியாட்டயருங் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள உலோவியதும் வியப்பன்று. இராமனுக்கும் அரசபாரத்தினும் போகத்தின் நினைவே நிமிர்ந்தில்லாக்கால், இலக்குமணனை, "இந்த இராச்சியத்தை நீ அடைந்து உனது இஷ்டப்படி சகல போகங்களையும் அனுபவிக்கலாம்" என்று தேற்றியிருப்பானோ! கைகேசியும் பெருந்தன்மையுடையவளாய்க் காணப்படவில்லை. மந்தரை சென்றவளிடத்தில் வற்புறுத்தியவைகளில், "நீங்கள் உங்கள் அழகினாலுண்டான கர்வத்தால் கௌசலையை இதற்குமுன் அவமானஞ் செய்திருக்கின்றீர். அவள் மட்டும் நல்லபதவிக்கு வந்துவிட்டால் உங்களை ஏன் அவமானஞ் செய்யமாட்டாள்" என்றுரைத்த வாக்கியம், அரசனது அந்தப்புரத்தை உழக்கிய அழுக்காறு முதலிய இரகசியத்தை வெளியாக்குகின்றது. இராமனது பட்டாபிஷேகத்திற்கு இடையூறு நேரலாமென்றஞ்சிய தபரதனையுங் கௌசலையையும் போலவே சீதையும் அஞ்சி, அவன் மாளிகையினின்று புறப்படும்போது "தங்களைக் கீழ்த்திசையில் இந்திரனும், தென்திசையில் யமனும், மேற்றிசையில் வருணனும், வடதிசையிற் குபேரனும் காக்கக் கடவர்" என்று மங்களங்களை மனத்தினுற் கருதியவளாய் வாயில்வரையும் பின்சென்றனள். வாயிழந்துவருந்திக் கிடந்த தபரதனை நோக்கிய இராமன், "நீர் கோபத்தினாலாவது செல்வாக்கினாலாவது பிதாவைப் பார்த்துக் கடிந்து பேசினபடியால் அவர் மனம் இவ்வாறு குழப்பம் அடைந்திருக்கின்றதா" என்று கைகேசியை வினவியதிலிருந்து மன்னனுக்கு அவன்மனைவியால் இக்கதியும் முன்னர்ப் பலகால் நேர்ந்திருத்தல் வேண்டுமென்பது வெளியாகின்றது. கைகேசியின் கூற்றிற்கிணங்கி அடவி நண்ணுதற்கு உடன்பட்டதை விளம்பிய இராமன், "நானே சீதையையும். இராச்சியத்தையும், விருப்பத்திற் கிடனான உயிரையும் பொருளையும் ஒருவருடைய ஏவலுமில்லாமல் மனமுவந்து என் சகோதரர்களுக்குக் கொடுத்துவிடுவேன்" என்னுங்கால், சீதையையும் ஒரு போகம்

பொருளாகவே மதித்துவிவகரித்தான் எனத்தோன்று தொழித லருமை. பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போவதையும் தான் "ரிஷிபோல், மாம்ஸத்தைநீக்கிக் காய்கிழங்கு தேன் இவைகளை உணவாகப் புசித்துக்கொண்டு மநுஷ்ய சஞ்சாரமற்ற காட்டில் பதினான்கு வருஷம்" வசிக்க வேண்டி நேர்ந்ததையும் தன்தாயினிடம் சென்றுரைத்த இராமன், ஊன்வகை உண்பதற்கியலாத் தன் நிலைமையைக்குறித்து மிகவும் பரிந்துகொள்வான். இரண்டையுங் கேட்டாள் கௌசலை. அடவியில் அவன் படவிருக்குந் துயரைப் பற்றி நினைப்பதன்முன், அவன் அரசனுகாமையால் தனக்கு எய்தவல்ல இன்னல்களையே உன்னினளாய்ப் பின்வருமாறு புலம்புகின்றாள்:—"என்மைந்த, ராகவ, கணவருடைய அநுகூலத்தினால் உண்டாகுஞ் சிறப்பையுஞ் சௌக்கியத்தையும் முன்னர் ஒருபொழுதும் நான் கண்டதேயில்லை. ராமனாலாவது சுகத்தைக் காணலாமென் றிருந்தேன். எல்லாரிலும் பெரியவளாக இருந்தும் ஒருநாளும் சுகத்தையே கண்டிராத நான் கணவரின் கருத்தைக் கெடுக்கின்றவர்களும் என்னிலும் இளையவர்களுமான சக்களத்திகளுடைய மிகக்கொடிய வார்த்தைகளைக் கேட்கவேண்டியவளாகப்போகின்றேனே.................பர்த்தாவினால் அவமதிக்கப்பட்ட யான் தலைமையை இழந்தேன்; கைகேயியின் வேலைக்காரிகளோடு ஒத்தவளாகச் செய்யப்பட்டேன்...........புதல்வனே, கதியற்ற நான், எப்பொழுதும் மிக்க சினத்தோடு கலந்து பேசுங் குணமுள்ள கைகேயியினது முகத்தை எவ்வாறு பார்ப்பேன்? உனக்கு உபநயனஞ் செய்தபின்னர் இந்தப் பதினேழு வருஷங்களாக, எப்பொழுது என்னுடைய துக்கம் போகப்போகின்றது, எப்பொழுது உன்னுடைய பட்டாபிஷேகத்தை நான் காணப்போகிறேன், என்று காத்திருந்தேன். இவ்வளவு முதுமைப்பருவத்தை அடைந்த என்னால் இந்தத் தீராத் துக்கத்தையும் சக்களத்திகளின் அவமதிப்பையும் இனி ஒரு கணமேனும் பொறுக்கமுடியாது ......" சக்களத்திபோராட்டம் இது மன்னர்மாளிகையிலும் நிகழவேண்டுமென்பது சாதாரண மாநுட இயற்கைக்கு ஏற்றதென்று எண்ண அமையுமுன் கலையின தழகை இவ்வாறு கலைப்பதோ என்பதையுன்னிச் சிறிது சோர்தலுந் தரும். இராமனுந்தானென்ன? பரதனைப் பாராட்டும்விதம் பரிதாபமாயிருக்கின்றது. வனத்திற் குடன்வருவேனென்று நின்ற சீதையை விலக்குதற் குரைத்த காரணங்களி லொன்றாய், "கைகேசியின் வசத்தில்நிற்கும் பரதனும் இராச்சியத்தை யடைந்த பிறகு, மிகவும் துக்கத்தையடைந்த கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும் மாட்டான். ஆகையால், நீஇவ்விடத்திலேயே இருந்துகொண்டு கௌசலையைப் பாதுகாக்கவேண்டும்" என்பான் இராமனென்றால் பரதன்பெருமையை அவன் அதிகம் மதித்ததாகக் காணவில்லை. இதுவுமன்றிச் சீதையின்பால் விடைபெற்றேக வந்த இராமன் பிரிவு மொழிகளாய், "நீ பரதன்முன் என்னை ஒருபொழுதும் புகழ்ந்துபேசாதே. புத்தியுடனிருக்கும் புருஷர்கள் பிறருடைய துதியைப் பொறார்களன்றோ! ஆகையால் பரதன்முன் நீ என் குணங்களை எடுத்துரைக்க வேண்டாம்" என்றுஅறிவுறுத்தியதும்பரதனதுபெருமைக்கேனும் அதனை அயிர்த்த இராமனுடைய புகழிற்கேனும் அடுத்ததன்று. இறுதியில், "காட்டுக்குப் போகின்ற என் குமாரனை இராமனை நீ அலட்சியம் பண்ணாதே. கணவன் செல்வம் படைத்தவனாக இருந்தாலும் பணமற்றவனாக இருந்தாலும், அவன்தான் உனக்குத் தெய்வம்" என்று வற்புறுத்தியே சீதைக்கு விடைகொடுக்க வேண்டியது அவசியமென்று கௌசலைக்குத் தோன்றியதும் இவ்வரசமாதர்களது அருமைக் கழகாகாது. இல்லானை இல்லாளும் வேண்டாள் என்ற கொள்கைக்குச் சீதையும் இலக்காகக்கூடும் என்று போகத்தைப் பின்பற்றியதோர் தாயின் மனம் அஞ்சிய தியற்கையே.

வடநூல் இவ்வண்ணம் சாதாரணமானவோர் குடும்பவாழ்க்கையின் குறைகளை மறைக்காமல் ஒற்றுமை நயத்தையும் இயற்கை நவிற்சியையும் கையாண்டு விட்டதால் கம்பர் தயரதப் பெரும்பேர் மன்னனது மாளிகையையும் அந்தப்புரத்தையும் மண்ணிலமைக்காது கலையெனு மாகாயத்தில் திகழும்படியோர் சித்திரத்தை நிகழ்த்துகின்றார். போகத்தில் நாட்டமில்லாத் தயரதனுக்கும் அவன் மனைவியர் புத்திரர்முதலானவர்களுக்கும் சிறியன சிந்தியாத செம்மையே இயற்கையாயிற்று. கம்பரது பாத்திரங்களில் ஒருவரேனும் முன் வான்மீகத்தில் வந்துள வாக்கியங்களின் கருத்துக்களைத் தழுவி உரைத்திலர். பரதனுக்கு அஞ்சி யாதும் விரைந்திலன் தயரதன். தன் அழகின் செருக்கினால் கைகேசி கௌசலையை அவமதித்ததாகத் தெரியவில்லை கடுஞ்சொற்களால் கைகேசி தன் கணவனை இடித்துரைத்து நலிவு செய்யும் வழக்கம் இருந்ததென்று அறியோம். நம் செவிக்கு எட்டாதவரையில் சக்களத்திப் பூசலொன்றும் இருந்ததில்லை யென்றே கொள்ளல் வேண்டும். இஷ்டப்பிரகாரம் போகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும்படி இராமன் இலக்குமணனுக் கொன்றும் ஆசைகள் அளித்தானல்லன். பரதன், கௌசலையைப் புறக்கணிப்பானென்ற அச்சம் இராமனுக் கிருந்திலது. பரதன் வெறுக்காவண்ணம் சீதை ஒழுகுதற்குரிய சூழ்ச்சிகளை இராமன் அவளுக்குக் கற்பிக்க நினைத்திலன். நல்குரவுற்ற நாயகனை நலியா மதியைத் தன் மருகிக்குக் கௌசலைக் கற்பிக்கப் புகுந்திலள்.

கம்பரது சித்திரத்தின்படி எவ்வகைப் போகத்தையும் துய்த்திருக்குங் கருத்தால் யாவரும் இங்கு இயங்கினாரலர். ஆதலின் யாரும் யாரையும் பயந்திலர், பகைத்திலர், வெறுத்திலர், பழித்திலர். அன்பும், கரவிலா வுள்ளத் துவகையும், அறத்தான் வரு மின்பமும் ஒன்றுகூடி வேற்றுமையறியா வாழ்க்கையைத் தயரதனது அரண்மனைக்குள் இனிதே நிகழ்த்திவைத்தன. மந்தரையின் மாயத்திற் கிரையாகாமுன்னம், "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ" என்பாள் கைகேசி. மன்னனே கணவனாகவும் பரதனே புத்திரனாகவும் வாய்த்துள கௌசலைக் கின்னமும் எய்தவல்ல பாக்கியம் யாதுளதென்று, மக்களுக்குள் வேற்றுமை இன்மையோடு, அக்கௌசலையின் நல்வாழ்வை உளமுவந்து பாராட்டுகின்ற கைகேசி அவளை ஒருநாளும் அவமதித்திராள். பரதனுக்கே பட்டம் சூட்டப்போவதை இராமன்வாய் உணர்ந்த கௌசலை தன்னிலை தாழ்ந்ததெனப் பதைபதைத்துருகுதற் கெதிராய், "நின்னினும் நல்லன் பரதன்; நிறைகுணத்தவன், நம்பிக்கு நானிலம் நீ கொடுத்து ஒன்றி வாழுதி ஊழிபல" என்று மகிழ்ந்து வாழ்த்துகின்ற இயற்கையின் ஒருதனிப் பெருமை அவளுக்குக் கம்பர் கலையின்திறத்தாலேயே கிடைக்கின்றது.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி,
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. **V. P. Charge Extra.**

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

சென்னை மாகாணக் கல்வி மஹாநாடு

22-வது சென்னைமாகாணக் கல்விமஹாநாடு இம்மாதம் 22-ந்தேதி கோயமுத்தூரில் கூடிற்று. மஹாநாட்டைத் திறந்துவைத்த கனம் சேதுரத்னம் ஐயர் செய்த உபந்நியாசச் சுருக்கம் வருமாறு:—எல்லாத் தொழில்களிலும் உபாத்திமைத்தொழில் மிகவும் சிரேஷ்டமானது. ஆனால் அனுபவத்தில் பார்க்கப்போனால் உபாத்தியாயர்களின் தொழிலுக்குத்தான் சிரமத்திற்குத் தகுந்த பிரதிப்பிரயோசனம் கிடையாது. எனினும் ஆசிரியர்கள் ஆடம்பரமற்ற வாழ்வையும், உயர்ந்த நோக்கத்தையும் உடையராய்த்திருப்தியுடனே இருந்துவருகின்றனர். இந்த ஆசிரியர்கள் வருங்காலவாழ்வைச் செப்பனிடும் ஆற்றல் உள்ளவர்கள். டாக்டர் மில்லர், கும்பகோணம் ஐஸ்கூல் கிருஷ்ண ஐயர், திருச்சி நாஷனல் ஸ்கூல் சேஷஐயங்கார், கோயமுத்தூர் வைத்திலிங்க வாத்தியார் ஆய பலரை அறியாதவர்கள் யார்? இத்தகையார்களைப்போல் உபாத்தியாயர்கள் இருக்கவேண்டும். நீங்கள் ஒன்றுசேர்ந்து வேலைசெய்தால் சம்பளம் முதலிய சௌகரியங்களும் ஏற்படும். இதுநிற்க, கல்வி விஷயமாகவும் சில வார்த்தைகளைக்கூற விரும்புகிறேன். கீழ்தரப் பள்ளிக்கூடங்களில் பாடங்கள் தேசபாஷையில் போதிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்கள் சிரமப்பட மாட்டார்கள். மேலும் உபாத்தியாயர்கள் ஒன்றுசேர்ந்து பாடபுத்தகங்களை நிர்ணயிக்கவேண்டும். பல பாடங்கள் நவீன முறையில் போதிக்கப்படல் நலம். பண்டைக்காலம் அனுஷ்டிக்கப்பட்ட குருசிஷ்யத்துவம் இக்கால முறைக்கு ஏற்றவாறு அனுஷ்டிக்கப்படவேண்டும்.

பின்னர் ராவ்பகதூர் ஸ்ரீமான் C.S. ரத்னசபாபதி முதலியார்பேசியதாவது:-நமதுசர்வகலாசாலைக் கல்வி நம்மிடை வேலையில்லாத்திண்டாட்டத்தைஉண்டாக்கிவிட்டது. இப்பொழுது கல்வி அன்னிய பாஷைமூலம் கொடுக்கப்படுவதால் அறிவு நூல்களும் சாஸ்திர நூல்களும் பாமர ஜனங்களிடம் பரவவில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட எல்லைவரையில் எல்லாப் பாடங்களும் தேசபாஷையில் போதித்தல் அவசியமாகும். தவிரவும் தொழிற்கல்வி மிகவும் அவசியம். பள்ளியிற் பயின்று சென்றவன் சிரமமில்லாது சம்பாதித்துக் கொள்ள வேண்டிய பயிற்சியும் மாணவர்கள் பள்ளியிலிருந்து வெளிவந்ததும் துணிகரமான வேலைகளைமேற்கொள்ளக்கூடியஊக்கமும் பெறவேண்டும். படிப்பதும் சிறிய உத்தியோகத்தில் அமர்வதும் தேசமுன்னேற்றத்திற்குரியவைக ளாகா. ஸ்ரீமான்களான, இஞ்சினீர், மனமோகன்சிங், சல்பாலபோன்ற யுவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குத் தைரியமாய் ஆகாய விமானத்தில் பிரயாணம்செய்து இந்திய யுவர்களுக்கு வழிகாட்டியுள்ளார்கள். இத்தகைய முற்போக்கான காரியங்களில் இந்தியமாணவர் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் தேசம் முன்னேறும். ஸ்கூல்பைனல் படிப்புத்திட்டத்தில் இப்பொழுது மாறுதல்கள் செய்யலாயின. சர்வகலாசாலைப் படிப்பிற்கு மாணவர்களைத் தகுதியாகச் செய்யும் நோக்கம் இப்பொழுது மாற்றப்பட்டு, படிப்பைப் போதுமானதாகச் செய்யும் நோக்கமுடையதாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்கூல் பைனல் பரிக்ஷையில் 100-க்கு 35 வீதம் மார்க்கு வாங்கினால்போதும் என்று திருத்தப்பட்டிருக்கிறது. இந்த மாறுதல்கள் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் திருப்தி அளிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்கள் நிலைமையும் உயருமாறு செய்யவேண்டும். இத்தகைய முறையில் ஏற்படும் திருத்தம் கல்விவளர்ச்சிக் குரியதாகும்.

***

ஆட்சிமுறை:—இப்பொழுது லண்டன் நகரிலிருக்கும் கவி ரவீந்திரநாதர் ஆட்சிமுறை இயந்திரம் என்னும் விஷயமாய் ஒரு கூட்டத்தில் செய்த பிரசங்கச் சுருக்கம் வருமாறு:—

உங்கள்நாட்டில் மனிதர்கள் மனோபாவத்தைத்தெரிந்து அறிவிப்பவர் இருக்கின்றனர். இந்தியாவில் இதுபோது நடந்துவரும் இயக்கம் சாத்தியமாயிருப்பதும் உங்களால்தான். ராஜப்பிரதிநிதி சிறந்த ஆங்கிலேயர். எனினும் ஆங்கில ஆட்சிமுறையில், ஒரு மனிதனுடைய சிறந்த தன்மை இயக்கம்பெற இடமில்லை. ஏனெனின் அரசாங்கம் ஒரு சிக்கலான யந்திரம். உயிரற்ற பொருள்போல் நாடு இருந்தவரையில் எந்திரம் சரியே சுழன்றது. அந்நிலை மாறினதால் யந்திரமனிதருக்கு ஆத்திரம் ஏற்பட்டு விட்டது. காந்தி அடிகள், 'நீரும் மனிதர்தான்' என்று ஞாபகமூட்டுகின்றார். இரு நாட்டாரும் மனிதர் என்ற தன்மையில் ஒருவரை ஒருவர் அறிந்து நட்பொடு வாழவேண்டும். நமது சிறப்பு வெளிவந்தால்தான் மேல்நாட்டார் சிறப்பை நாம் அறிய இயலும். அன்னதற்கு விடுதலை அவசியம். அப்பொழுதுதான் விடுதலையுடனிருக்கும் மேல்நாட்டார் சிறப்பு வெளியாகும். மேலும் இரு நாட்டாரும் எந்திரத்தில் நம்பிக்கை வைக்காது மனிதசுபாவத்தில் பிடிப்புவைத்து வினைசெய்வோமாயின் ஒருமுடிவு கைவரப்பெறும். மேல்நாட்டிலுள்ள மனிதர்களிடம்தனித்தனியே எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. இருநாட்டாரும் வாழ்வின்பால் நம்பிக்கை கொள்வார்களேல், ஒன்றுபட்டு இருப்பது எளியதே.

***

இவ்வருடம் பெஷாவரில் நல்ல சாகுபடி இல்லாது போனதினால், பெஷாவர் கவர்ன்மெண்டார், 2லக்ஷம் ரூபாய் வரையில் வாயிதாபணம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்று பெஷாவர் செய்தி கூறுகின்றது.

***

அரசாங்க அறிக்கை:—துருக்கியில் உத்தியோக முறையில், அல்லது சட்டப்படி உபயோகிப்பதற்குரியதான நீதிபரிபாலன விஷயமான தஸ்தாவேஜிகளுக்கு அத்தாக்ஷி அளிக்கச் சென்னை போலீஸ் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சென்னை அரசாங்க சட்ட இலாகா அறிக்கை கூறுகின்றது.

189106

***

ஏகாதிபத்தியதினம்:—சென்றவாரம் இந்தியாவெங்கும் ஏகாதிபத்தியதினம் கொண்டாடப்பட்டது. ஸிம்லா குதிரைக் காட்சிச்சாலையில் நடந்த கொண்டாட்டத்தில் இர்வின் பிரபு பிரஸன்னமாயிருந்து சாரணர்களுக்குப் பரிசுகள் அளித்தார்.

ஒட்டக்கூத்தர் பாடிய **தக்கயாகப் பரணி** மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம் :— 'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ரூ. 500

இனாம்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சிமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம் ...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்	ரூ.	5.
ஆரண்ய காண்டம் ...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம் ...	ரூ.	4-8.
சுந்தர காண்டம் ...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)